பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 29 சனிக்கிழமை 16.10.2021 கதிர் 345

### இனி இது ரகசியம் அல்ல!

எனக்கு ஒரு நண்பர். என்னிலும் வயதில் மூத்தவர். தன் பெயரைப் பகிரங்கமாக குறிப்பிடுகின்றமையை விரும்பமாட்டார். அதனால் குறிப்பிடாமல் தவிர்க்கிறேன்.

எங்களுக்குள் ஒரு விடயத்தில் பலத்த முரண்பாடு. ☞2

## சுமந்திரன் அறிவித்த

# போராட்டத்துக்கு மாவை தலைமை!

### தமிழரசின் பிரமுகர்கள் நேற்றுக் கூடித் தீர்மானம்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16

விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை முன்னிறுத்தி நாளையும் மறு தினமும் நடத்தப்படும் என சுமந்திரன் எம்.பி. அறிவித்துள்ள போராட்டத்திற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவே தலைமை தாங்குவார். ☞2

## மேலும் 20 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி, நாட்டில் ☞12

## நேற்று தொற்று 666

இலங்கையில் நேற்று 666 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. ☞12

## கரன்னாகொடவுக்கு நீதிமன்றம் அழைப்பு



முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை எதிர்வரும் 29ஆம் திகதி ஆஜராகுமாறு ☞12

## புதிய சுகாதார வழிகாட்டல் வெளியீடு

சுகாதார அமைச்சால் புதிய சுகாதார வழிகாட்டல் கோவை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, வீட்டிலிருந்து தொழிலுக்காக, மருத்துவதேவைகளுக்காக மற்றும் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வெளியே செல்ல ☞12

## சகல மக்களையும் ஒடுக்குகிறது அரசு

### சஜித் குற்றச்சாட்டு



பொருளாதாரத்தில் அதிசயங்களைச் செய்யக்கூடிய ஏழு மூளைகளைக் கொண்ட ஒருவர் இருக்கின்றார் எனப் பெருமை பேசிய அரசு, முன்னெப்போதும் இல்லாத வகையில் ☞12

## வடக்கு முதல்வர் வேட்பாளராக மீளவும் களமிறங்க நான் தயார்

### விக்கி பகிரங்க அறிவிப்பு



(இ.கலையமுதன்)

நான் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக மீண்டும் களத்தில் குதிக்கத் தயாராக இருக்கின்றேன்.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் நேற்று அறிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

## மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாட்டைக் கடுமையாக்குக!

### பாதுகாப்புத் துறையினருக்கு ஜனாதிபதி கோட்டா உத்தரவு



நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை, இம்மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை வரை கடுமையாகக் கடைபிடிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் 19 ☞12

## ஐ.பி.எல். கிண்ணம் சென்னை அணி வசம்!



14 ஆவது ஐபிஎல் தொடரின் இறுதிப்போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியை 27 ஓட்டங்களால் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 4 ஆவது தடவையாகவும் ஐ.பி.எல். கிண்ணத்தைத் தனதாக்கியது.

டுபாயில் நேற்று நடைபெற்ற 2021 ஐ.பி.எல். மாபெரும் இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதின.

அதற்கமைய, நாணய சுழற்சியில் வென்ற ☞12

## வடக்கு நிர்வாகக் கட்டமைப்பு கட்டாயம் மறுசீரமைக்கப்படும்

### புதிய ஆளுநர் ஜீவன் உறுதி



வடக்கு மாகாண நிர்வாகக் கட்டமைப்பு மறுசீரமைப்பு செய்யப்படும் என்றும், அதனைச் செய்யாவிடின் தன்னை விமர்சிக்குமாறும் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராக ☞12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர் மாவை சேனாதிராசாவின் தீவிர விசுவாசி. இவ்வளவுக்கும் ஒரு நாள் தன்னும் மாவை சேனாதிராசாவை சந்தித்துப் பேசியிருப்பாரோ தெரியவில்லை.

என் பத்திகளில் மாவை சேனாதிராசாவை நான் கிண்டல் பண்ணி ஏதேனும் எழுதினால் காலையில் பத்திரிகை பார்த்ததும் ஓர் அழைப்பு எடுப்பார். தன் ஆட்சேபனையை நாகரிகமான முறையில் அழுத்திக் கூறுவார்.

"நான் மாவை சேனாதிராசாவுடன் பழகியவன் அல்லன். தூர இருந்து பார்ப்பவன். உன் மூலம்தான் அவர் பற்றிக் கேள்விப்பட்டு அறிந்து, புரிந்து கொள்டேன். யுத்த காலத்திலும், பின்னரும் அவருடன் நெருங்கிப் பழகியவன் நீதான். அவரை இப்படியா நீ தாக்கி எழுதுவது ....?" – என்று புலம்புவார்.

தப்பித் தவறி நான் மாவை சேனாதிராசவை மெச்சி ஏதாவது எழுதினால் குறைந்த பட்சம் 'வட்ஸ் அப்'பிலாவது ஒரு பாராட்டு வரும்.

நிச்சயம் கடந்த பொதுத்தேர்தலில் மாவை சேனாதிராசாவுக்குத்தான் குடும்பத்துடன் வாக்குப் போட்டிருப்பார் என்று நினைக்கின்றேன்.

"போராட்டம் வெடிக்கும்,போராட்டம் வெடிக்கும்" என மாவை சேனாதிராசா அடிக்கடி குறிப்பிடுகின்றமையை ஏதோ ஒரு பத்தியில் நளினமாக நான் கிண்டல் பண்ணியிருந்தேன்.

அதை வாசித்த அவர் ஒரு தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

"தமிழர்களின் அகிம்சை வழிப்போராட்டம் முட்டுச் சந்தியில் முடங்கியபோது மறவழிப் போராட்டமே மாற்றுவழி என்று துணிச்சலுடன் முதல் சிந்திக்கத் தலைப்பட்டவர் மாவைதான். அந்த நேரத்தில் எல்லோரும் காந்தீயவழியில் வெறிப்பிடித்து உறுதியோடு நின்றபோது ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்று மாற்றுச் சிந்தனையை வெளிப்படுத்திய முதல் மட்ட இளைஞர்களில் அவர் முக்கியமானவர். இன்று அவர் தளர்ந்து விட்டார். வயதாகி விட்டது. ஆனால் போராட்ட சிந்தனை அவர் இரத்தத்தில் ஊறியுள்ளது. அதனால்தான் அப்படிப் பேசுகின்றார். அதை நீ புரிந்து கொள்ளவில்லை" – என்று கடிந்து கொண்டார்.

நானும் பதிலுக்கு வாயாடினேன். ஆனாலும் அப்போதும் கூட மாவை சேனாதிராசாவின் பழைய போராட்ட உணர்வை நான் மறுக்கவில்லை.

மாவை சேனாதிராசாவின் போராட்ட உணர்வை ஒட்டி தலைவர் பிரபாகரனே என்னிடம் ஒரு தடவை கூறிய ஒரு தகவலை நான் அச்சமயம் என் நண்பருக்கு எடுத்துரைத்தேன்.

"பார்த்தாயா? தலைவர் பிரபாகரனுக்குப் புரிந்தது, உனக்குப் புரியவில்லை" – என்றா என் நண்பர்.

"பொலிஸார் மாவை சேனாதிராசாவைத் தேடிய சமயத்தில், அப்போது 'தம்பி'யாக போராட்ட சிந்தனையுள்ள தமிழ் இளைஞர்களுக்கு உதவி, ஒத்தாசை புரிந்த தாம், ஓரிடத்தில் மறைவாகத் தங்கியிருந்த மாவை சேனாதிராசாவுக்கு சாப்பாட்டுப் பார்சல் எடுத்துச் சென்றமையை நினைவுபடுத்தினார் தலைவர். 'மாவை அண்ணனைச் சந்திக்கும் போது அவரிடம் நினைவூட்டுங்கள். வலிகாமம் வடக்கில் ஓரிடத்தில் (அவர் இடத்தின் பெயர் கூறினார். நான் மறந்து விட்டேன்) மறைந்திருந்த மாவை அண்ணனுக்கு வேலி பிரித்துச் சென்று பின்பக்கத்தால் சாப்பாடு கொண்டு போய்க்கொடுத்தேன். அவர் ஊஞ்சல் ஒன்றில் அமர்ந்திருந்து சாப்பிட்டார்.' என்று தலைவர் பிரபாகரனே பழையவற்றை நினைவுபடுத்தி என்னிடம் கூறியிருந்தார்.

சில தினங்கள் கழித்து மாவை சேனாதிராசாவை சந்தித்தபோது அவரிடம் இது பற்றிக் கேட்டேன். விலாவாரியாக நடந்தவற்றை அவர் சொன்னார்.

எண்பதுகளுக்கு முன்னர் நடந்த இந்தச் சம்பவத்தை 2002 அளவில் தலைவர் என்னிடம் கூறினார் என நான் நினைக்கிறேன்.

இதை நான் இன்று குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உண்டு. மாவைக்கு வக்காலத்து வாங்கும் என் நண்பர் கூறிய 'போராட்ட வெறி' மாவை சேனாதிராசாவில் ஊறிக் கிடக்கின்றது. – இந்த வயதான காலத்திலும் கூட – என நான் ஒப்புக் கொள்ள வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதால்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை முன்வைத்து 17, 18 ஆம் திகதிகளில் போராட்டம் என்ற முடிவை கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் கலந்தாலோசிக்காமல்தான் சுமந்திரன் அறிவித்தார்.

அதனால் இந்தப்போராட்டத்தில் மாவை சேனாதிராசா கலந்துக் கொள்ள மாட்டார், ஒதுங்கிக் கொள்வார் என்றே பலரும் எதிர்பார்த்தனர் – நான் உட்பட.

வழமைபோல இணையத்தளம் ஒன்றும் தன் கைவரிசையைக் காட்டியது. சுமந்திரனை வீழ்த்துவதாக நினைத்துக் கொண்டு "17, 18ஆம் திகதிய போராட்டங்கள் பற்றி எமக்கு எதுவுமே தெரியாது. அவை கூட்டமைப்பின் ஏற்பாடு அல்ல, மூன்று கட்சித் தலைவர்களும் கைவிரித்தார்கள்" – என்று புனைகதை அவிழ்த்து விட்டது அது.

ஆனால், இந்தப் போராட்டம் குறித்து ஆராய தமிழரசுப் பிரமுகர்கள் நேற்றிரவு 'சூம்' முறையில் நடத்திய கூட்டத்திற்கு மாவை சேனாதிராசாவே பிரசன்னமாகி தலைமை வகித்தார்.

மேற்படி இணையத்தளச் செய்தியை முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் கூட்டத்தில் சுட்டிக் காட்டியதும் சீற்றத்துடன் குறுக்கிட்டார் மாவை சேனாதிராசா.

"இந்தப் போராட்டத்தைப் பற்றி எனக்குத் தெரியாது என்று நான் கைவிரித்திருந்தால் எப்படி இந்த 'சூம்' சந்திப்புக்கு வந்திருப்பேன்? நான் இங்கிருப்பது மட்டுமல்ல, இந்தப்போராட்டத்தில் முழுமையாக ஈடுபாடு கொண்டுள்ளேன். எமது மீனவர்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும் இத்தகைய போராட்டங்களை நாம் நடத்துவது அவசியம். அதை சுமந்திரன் ஆரம்பத்திருக்கின்றமை மிக நல்ல விடயம். காணி அபகரிப்பு, ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் நாம் போராட்டம் நடத்த வேண்டும். சுகவீனம் காரணமாக முல்லைத்தீவுக்குப் போராட்டத்துக்கு எனக்குப் போக முடியுமோ தெரியாது. ஆனால் நான் யாழில் போராட்டத்தில் முழு மூச்சாக நிற்பேன்." – என்று ஆவேசத்துடன் கூறினார் மாவை சேனாதிராசா என அறிய வந்தது.

போராட்ட வீறு மாவை சேனாதிராசாவில் இன்னும் அடங்கவில்லை. கனன்று கொண்டுதான் இருக்கின்றது. இந்த 78 வயதிலும் இப்படி அவர் சீறியமை அதைத்தான் காட்டுகின்றது. அதற்கு ஒரு சல்யூட்...!

"அரசு என்ற பூனைக்கு போராட்டம் என்ற மணியைக் கட்டுவது யார் என்பதுதான் பிரச்சினையாக இருந்தது. சுமந்திரன் கட்ட முன்வந்துள்ளார். அவருக்கு ஒத்துழைப்பது நமது கடமை" – என்று நேற்றைய கூட்டத்தில் தமிழரசின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான செல்வராசா கூறியமையும் இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதுதான்.

எது, எப்படியோ, பிரிந்து நின்ற தமிழரசுத் தலைவர்கள் போராட்டத்தின் பெயரால் மீண்டும் தங்களுக்குள் ஒன்றிணைவது மகத்தான காரியம். அது கட்சியையும் பலப்படுத்தும். கட்சிக்குள் இருந்து கொண்டு குடைச்சல் கொடுக்கும் பிரகிருதிகளையும் நேர்வழிப்படுத்தும். காலை வாரும் பங்காளிக் கட்சிகளின் வயிற் றில் புளியையும் கரைக்கும்..!

பார்ப்போம் என்ன நடக்கின்றது என்பதை.

– மின்னல் –

## வடக்கு முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக எந்தவித பேச்சும் நடைபெறவில்லை. எல்லாக் கட்சிகளும் இணைந்து சில விடயங்களை அரசுடன் பேச முடியுமா என்பது தொடர்பாகவே ஆராயப்பட்டு வருகின்றது. அதில் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமான பேச்சுக்கள் இதுவரை நடைபெறவில்லை.

என்னைப் பொறுத்த வரையிலே மாகாண சபைத் தேர்தலை அரசு தற்போதைக்கு நடத்தாது என்பதே என்னுடைய கருத்து. அரசிடம் பணமில்லை. கருத்துக் கணிப்பு மூலமாக அரசு தனக்குள்ள ஆதரவு குறைந்ததை உணர்ந்துள்ளது.

ஆகவே, மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் பிரச்சினை ஆகிவிடும் என்கின்ற அடிப்படையில் அவர்கள் தேர்தலைத் தள்ளி வைக்கவே விரும்புவார்கள்.

அரசுக்கு மாகாண சபையைத் தொடர்ந்தும் வைத்திருக்கக் கூடாது என்ற எண்ணமே இருக்கின்றது. புதிய அரசமைப்பின் மூலம் மாகாண சபை முறைமையை நீக்கி முற்றிலும் சிங்கள பௌத்த அரசமைப்பைக் கொண்டு வருவார்களோ என்பது எனது சந்தேகம்.

தற்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அரசுக்கு நன்மையைத் தராது; தீமையையே தரும் என்ற அடிப்படையிலே மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என்பதே என்னுடைய கருத்து – என்றார்.

'மாகாண சபைத் தேர்தல் நடை பெற்றால் நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகக் களம் இறங்குவீர்களா?' எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது,

என்னை அரசியலுக்குள் கொண்டு வருவதற்கு கட்சிகளின் தலைவர்கள் பலர் சேர்ந்து எத்தனையோ முறை அழைத்ததன் பேரில்தான் இறுதியாக உடன்பட்டேன். இப்போதும் எங்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் எனக் கேட்டால் அது என்னுடைய கடமை என ஏற்று மீண்டும் களத்தில் குதிக்கத் தயாராக இருக்கின்றேன் – என்றார்.

## போராட்டத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்றுத் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் மற்றும் மூத்த தலைவர்கள் 'சூம்' வழியாக ஒன்றுகூடி ஆராய்ந்த சமயம் இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிய வந்தது.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் பொதுச்செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம், கட்சியின் சிரேஷ்ட துணை தலைவர்களான சி.வீ.கே.சிவஞானம் மற்றும் செல்வராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோருடன் சுமந்திரன் எம்.பியும் இந்தக் கலந்தாலோசனையில் பங்குபற்றினார்.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும், மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை வலியுறுத்தும் விதத்தில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் இந்த கூட்டத்தில் கருத்து வெளியிட்டார் என அறிய வந்தது. இதேவேளை காணி அபகரிப்பு மற்றும் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் இத்தகைய போராட்டம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா வலியுறுத்தினார்.

நாளையும் மறுதினமும் நடத்தப்பட இருக்கும் போராட்டங்களை கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா அங்கீகரிக்கவில்லை என்று சார்ப்பட வெளிவந்த செய்தியை அவர் மறுத்தார். இந்தப் போராட்டத்தில் பங்களிப்பும் ஈடுபாடும் இருப்பதால்தான் தான் இந்த சூம் கூட்டத்தில் பிரசன்னமாகி இருக்கிறார் எனவும் மாவை சேனாதிராஜா அங்கு குறிப்பிட்டார் என அறிய வந்தது. நேற்றிரவு சுமார் ஒரு மணி நேரம் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# எமது உரிமைகளை வென்றெடுக்க பாரத தேசம் துணை நிற்கவேண்டும்

## யாழ். மாநகர முதல்வர் வலியுறுத்து



எமது உரிமையினை வெல்வதற்கு பாரத தேசம் எமக்குத் துணை நிற்க வேண்டும் என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ் பொதுசன நூலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற அப்துல் கலாமின் 90 ஆவது பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வி.மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது உரிமைக் கோரிக்கையை வெல்வதற்கு பாரத தேசம் எமக்குத் துணை நிற்கவேண்டும் எமது தந்தை நாடு என்ற அடிப்படையில் நமக்கு துணை நிற்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுக்கின்றேன்.

ஒருபோதும் பாரத தேசத்தினுடைய நலன்களுக்கு முரணாக நாங்கள் செயற்படப் போபவர்கள் அல்லர். நாங்கள் பாரத தேசத்தினுடைய உறவுகளாக தொப்புள் கொடி உறவுகளாக அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக அவர்களுடைய பொருளாதாரத்தை - அவர்களுடைய பாதுகாப்பை - உறுதிப்படுத்தக்கூடிய ஒரு தரப்பாக நாங்கள் இந்தத் தேசத்தில் இருப்போம்.

எம்மைப் பொறுத்தவரை பாரத தேசம் என்பது எமது தந்தையர் நாடு. நாம் தந்தையர் நாடான பாரத தேசத்தைப் பின்பற்றி செயற்படுகின்றோம். அதாவது தாய் தமிழகம் என்பது எமது தொப்புள்கொடி உறவுகளாக உள்ளனர்.

தென்னிந்தியா என்பது எமது தொப்புள் கொடி உறவுகள் வாழ்கின்ற இடமாகும். ஆகவே பண்பாட்டு ரீதியாகவும் பாரத தேசத்தை நாங்கள் பின்பற்றுகிறோம்.

எங்களுடைய அரசியல் கலாசாரத்திலும் பாரத தேசத்தினுடைய அரசியல் கலாசாரத்தை பின்பற்றுகின்றோம்.

பாரத தேசத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பின்பற்றுகின்றவர்களை அங்கே நினைவு கூருவதை போல இங்கேயும் நினைவுகூரும் பண்பாட்டை பின்பற்றி வருகின்றோம்.

குறிப்பாக இன்றைய விஜயதசமி நாளில் (நேற்று) அப்துல் கலாமினுடைய பிறந்தநாள் நினைவு தினத்தில் பாரத தேசத்திற்கு ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். எமது நீண்டகால உரிமை கோரிக்கையை பாரத தேசம் செவிசாய்க்க வேண்டும்.

நாம் தென்னிலங்கையில் இருக்கின்ற சிங்கள மக்களுக்கும் எதிரானவர்களல்லர். நாங்கள் மற்றய இனத்தை அழிப்பதற்காக எமது உரிமையை கோரவில்லை. நாங்கள் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக - எம்மை வளர்த்துக் கொள்ள - எமக்கு உரிமை வேண்டும் என கடந்த 60 வருடங்களாகப் போராடி வருகின்றோம்.

அந்த வகையில் பாரத தேசம் எமது கோரிக்கையை நியாயமாகப் புரிந்து எமது கோரிக்கைகளை அடைவதற்குத் தன்னுடைய முயற்சி, அழுத்தங்களையும் அதனுடைய ஒத்துழைப்புகளையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

பாரத தேசம் தரும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம் ஏற்கனவே 13 ஆவது திருத்தச் சட்டத்தை பெற்றுத்தந்தது இந்த பாரத தேசமே. அந்த நன்றிக் கடன் எமக்குள்ளது. - என்றார்.

## யுத்தத்தில் உயிரிழந்தவர்களை விடவும் விபத்துக்களில் உயிரிழந்தோர் அதிகரிப்பு!

### சரத் வீரசேகர தகவல்

கடந்த 10 வருடங்களில் 27 ஆயிரம் பேர் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளனர் எனப் பொது பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நடைபெற்ற 30 வருடப் போரில் கூட 29 ஆயிரம் பேர் மாத்திரமே உயிரிழந்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதி விபத்துகள் தொடர்பாக சரத் வீரசேகர மேலும் கூறியுள்ளவை வருமாறு -

ஜனவரி முதல் இதுவரை ஆயிரத்து 760 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர்.

போக்குவரத்து விதிமீறல்கள், குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் அதிவேகம் காரணமாக இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. மேலும் போதைப் பொருளைப் பயன்படுத்துபவர்கள்தான் அதிக வேகத்தில் வாகனங்களை செலுத்துகின்றனர்.

அதனை பரிசோதிக்க எந்த உபகரணமும் இல்லை. ஆகவே, அந்த உபகரணங்களைவிரைவில்கொண்டு வருவோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தீயில் எரிந்து பெண் சாவு! கணவன் கைது

வவுனியாவில் பெண் ஒருவர் தீ விபத்துக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக குறித்த பெண்ணின் கணவர், சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, கற்பகபுரம், நான்காம் ஒழுங்கை பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டிலிருந்து புகை வெளிவந்ததைத் தொடர்ந்து அயலவர்கள் அங்கு சென்று பார்வையிட்டபோது, வீட்டின் அறை ஒன்றில் பெண் தீயில் எரிந்து கொண்டிருந்துள்ளார்.

இதையடுத்து அயலவர்கள் கதவை உடைத்து தண்ணீர் ஊற்றி தீயை அணைக்க முற்பட்டபோதிலும், அந்தப் பெண் முற்றாகத் தீயில் எரிந்து மரணமானார்.

இந்தச் சம்பவத்தின் போது அவரின் மகனான சிறுவன் மலசலகூடத்துக்குள் வைத்து வெளிப்பக்கமாக பூட்டப்பட்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விசாரணை செய்த பூவரசன்குளம் பொலிஸார், தற்போது குறித்த பெண்ணின் கணவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கணவர் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணிபுரிபவர் எனவும், மனைவிக்கும் அவருக்கும் இடையில் கடந்த பல மாதங்களாக குடும்பத் தகராறு இருந்து வந்ததாகவும் விசாரணைகளின் ஊடாகத் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**Faculty of Medicine, University of Jaffna**
**Vacancy**

**Post of Temporary Demonstrator**

Interview for the above post will be held on **01.11.2021 at 11.00 am via online** at the **Board Room, Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil.**

Applications are entertained from those who have passed the final examination of the MBBS or BSc degrees obtained in Allied Health Sciences from the State Universities or UGC recognized foreign Universities.

**Salary Scale:** Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of the relevant certificatesalong with the duly filled application in the prescribed application form.

The applications and scanned copies should reach, the following email address **on or before 25.10.2021:**
**E-mail address :deanmedicine@univ.jfn.ac.lk**

Application forms and other details are available in the Faculty of Medicine Website link:**http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf**

Applicants are requested to send the prescribed application form downloaded from the website with the paid Bank slip for the deposit / Cash deposit Machine receipts(CDM) of a sum of Rs.100.00 credited to the people's Bank Account no. (Ref No): 970000090000387of Bursar University of Jaffna.

***Note: The zoom link for the interview will be sent only to the shortlisted candidates.***

Registrar
University of Jaffna
15.10.2021

**மணமகள் தேவை**

யாழ். இந்து வேளாளர் குடும்பம், 1985 ஆம் ஆண்டு பிறந்த நற்குணமுள்ள உத்தரட்டாதி நட்சத்திரம் சூ/ செவ்.4இல், பாவம் 19 1/2 உள்ள, இலண்டனில் வசிக்கும் பட்டதாரி மணமகனுக்கு தகுதியான 1990 ஆம் ஆண்டிற்கு மேற்பட்ட மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:- 0779147318
Viber - 0766688199

**Personal English Classes**



K Ganesh (BA.Pera)
இந்த தனி வகுப்புகளில் படிக்கும் போது பேச்சு பயிற்சிகளும் இடம்பெறும்.
Grade 7-
GCE OL AL
பட்டதாரிகள் ,
தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## இந்தியாவுக்கு மீள வெற்றி

**இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் எனப் பல்வேறு விடயங்கள் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு, அவற்றை எதிர்கெள்ள இயலாமல் இலங்கை அல்லாடி வருகையில், கவுன்ஸிலில், வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு – 2024 டிசெம்பர் வரை – உறுப்புரிமை பெறத் தகுதியான 19 நாடுகள் நேற்றுப் புதிதாகத் தேர்வாகின.**

**ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு 47 நாடுகள் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்படுகின்றன. ஆபிரிக்க நாடுகள் – 13; ஆசிய – பசுபிக் நாடுகள் 13; கிழக்கு ஐரோப்பிய நாடுகள் – 06; லத்தீன் அமெரிக்க, கரீபியன் நாடுகள் – 08; மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஏனையவை – 07.**

**இந்த 47 அங்கத்துவ நாடுகளும் மூன்று பிரிவுகளாக – ஆண்டுக்கு ஒரு பிரிவினர் என்ற அடிப்படையில் – ஐ.நா. பொதுமன்றத்தில் நடைபெறும் தேர்தல் மூலம் தெரிவாகின்றனர்.**

**அந்த வகையில் இம்முறை 19 புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடந்தேறியுள்ளது. இத்தேர்தலில் ஒவ்வொரு பிராந்தியத்திலும் போட்டியிட்ட நாடுகளின் எண்ணிக்கையும், தேர்வு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் சமமாக இருந்தமையால் தேர்வில் போட்டியிட்ட அனைத்து நாடுகளும் தெரிவாகின. எனினும் இரகசிய வாக்களிப்பும், வாக்கு எண்ணிக்கையும் தவறாது இடம்பெற்றன.**

**இம்முறை தேர்தல் முடிவுகளில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் வருமாறு:–**

**★ ஆசிய, பசுபிக் நாடுகளுக்கான ஐந்து இடங்களுக்கான தேர்தலில் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியன தெரிவாகியுள்ளன. இந்தப் பிரிவில் பங்களாதேஷும் பாகிஸ்தானும் இந்த டிசெம்பருடன் வெளியேறுகின்றன.**

**★ ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குத் தொடர்ச்சியாக ஆறாவது தடவையாக இந்தியா வென்று தெரிவாகியுள்ளது. அதற்கு அதி உச்சமாக 188 நாடுகளின் ஆதரவு கிட்டியிருக்கின்றது. 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் குறைந்த பட்சம் 97 நாடுகளின் ஆதரவு அவசியம் என்ற நிலையில் இந்தப் பெருபெற்றியை ஈட்டித் தனது சர்வதேச செல்வாக்கை இந்தியா நிரூபித்திருக்கின்றது.**

**★ இம்முறை தெரிவின் மூலம் மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குள் நேரடியாக நுழைந்திருக்கின்றது அமெரிக்கா. 2018 இல் அப்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் முடிவு காரணமாக அமெரிக்கா, இந்தக் கவுன்ஸிலில் இருந்து வெளியேறியிருந்தது. புதிய அதிபர் ஜோ பைடனின் தீர்மானத்துக்கு அமைய இப்போது அமெரிக்கா கவுன்ஸிலுக்குள் நுழைந்து உறுப்பினராகவும் தேர்வாகி விட்டது.**

**★ மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருக்கும் எரித்திரியா, பஹ்ரைன், கமரூன், பிலிப்பைன்ஸ் போன்றவையும் இந்தக் கவுன்ஸிலுக்குத் தெரிவாகியுள்ளமை கேலிக்கூத்தான விடயம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

**★ தற்போதைய தேர்வு முடிவுகளின் படி 2024 டிசெம்பர் வரை அமெரிக்காவும், 2023 டிசெம்பர் வரை பிரிட்டனும் கவுன்ஸிலில் இருக்கப் போகின்றமை உறுதியாகியுள்ளது. இது மனித உரிமை மீறல், போர்க் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருக்கும் இலங்கைக்கு நெருக்கடியான விவகாரம் என்பது குறிப்பிடத்தக்கது.**

## மாற்று சிந்தனையுடன் இந்த நாட்டை கட்டியெழுப்பும் பணிகள் முன்னெடுப்பு!

### பிள்ளையான் கருத்து



இந்த நாட்டின் பொருளாதாரம் தாழ்த்தப்படவேண்டும் என்று செயற்படுகின்ற அரசியல் சக்திகளின் மத்தியிலேயே மாற்று சிந்தனையுடன் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பணிகளை முன்னெடுத்துவருகிறேன் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழான சௌபாக்கிய உற்பத்தி கிராமங்களை உருவாக்கும் வேலைத் திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு,மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஐந்து கிராமங்கள் சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் பனம்பொருள் உற்பத்திக்காகத் தெரிவுசெய்யப்பட்டன.

சின்ன ஊறணி,சத்துருக்கொண்டான், பனிச்சையடி, கொக்குவில், திராய்மடு ஆகிய கிராமங்களில் இந்த உற்பத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை மண்முனை வடக்கு பிரதேசசெயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன், மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுதர்சன், பனை அபிவிருத்தி சபையின் மாவட்ட இணைப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழான சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்களை உருவாக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் 91 லட்சம் ரூபா பனம்பொருள் உற்பத்தி செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற 127 யுவதிகள் இனங்காணப்பட்டு இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பயிற்சிகள் பனை அபிவிருத்தி சபை ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. - எனத் தெரிவித்தார்.

## மீண்டும் சிவப்பு வலயத்துக்குள் இலங்கை நுழையும் அபாயம்!

### விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

நாட்டு மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் நாடு மீண்டும் சிவப்பு வலயத்திற்குள் நுழையும் அபாயம் உள்ளதால், நாட்டை பச்சை வலயத்தில் தொடர்ந்தும் பேணுவது மக்களின் கடமையாகும் என சுகாதார அமைச்சின் தொழிநுட்ப சேவைகள் பணிப்பாளர் நாயகம் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இலங்கை சிவப்பு வலயத்திலிருந்து பச்சை வலயத்துக்கு முன்னேறியுள்ளது. கொவிட் தொற்றுப் பரவலைக் குறிப்பிடத்தக்க அளவு கட்டுப்படுத்தும் நாடுகள் பச்சை வலயத்தில் சேர்க்கப்படும்.

எனினும், நாட்டு மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் நாடு மீண்டும் சிவப்பு வலயத்துக்கு நுழையும் அபாயம் உள்ளது.

எனவே, நாட்டை பச்சை வலயத்தில் தொடர்ந்தும் பேணுவது மக்களின் கடமையாகும். நாட்டில் பதிவாகும் நாளாந்தக் கொவிட் உயிரிழப்பு மற்றும் தொற்று எண்ணிக்கையின் அடிப்படையில் சுகாதார ஸ்தாபனம் உட்படப் பல சர்வதேச அமைப்புகள் இலங்கையை மீண்டும் பச்சை வலயத்துக்குள் அனுமதித்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி பணிக்குழுவின் பரிந்துரைப்படி வெளியிடப்படவுள்ளது புதிய சுற்றறிக்கை

மணல், மண், சரளை மற்றும் களிமண் சுரங்கம், போக்குவரத்து மற்றும் வர்த்தகத்துக்கான அனுமதிகளை வழங்குவதற்கான நடைமுறைக்கு புதிய சுற்றறிக்கை வெளியிடப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பணிக்குழுவின் பரிந்துரைப்படி இந்த சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.

அகழ்வாராய்ச்சி, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் போன்ற செயற்பாடுகளில் பொது மக்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் சட்டரீதியான அரசு நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைத் தவிர்ப்பதற்கான பரிந்துரைக்காகவே இந்தப் பணிக்குழு அமைக்கப்பட்டது. இந்த பரிந்துரையின் படி, உலோகம், மணல், மண், சரளை மற்றும் களிமண் ஆகியவற்றின் சுரங்கம், போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி உட்பட சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் 63 பேரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் காணொலி மூலமாக கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும், அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் காத்தான்குடியைச் சேர்ந்த 65 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதேவேளை, சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்து, இருவேறு வழக்குகளைக் கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 5 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து 64 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்து தளர்த்தப்படாதா காரணத்தினால் காணொலி மூலமாக எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சிறிய நாடாகிய எமது கடல் வளங்களை வல்லரசான இந்தியா சுரண்டுவது கேவலம்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் வி. சுப்ரமணியன் காட்டம்

**(கலையமுதன்)**

யாழ்ப்பாணம், ஒக்.16

இந்திய அரசாங்கம் தமது நாட்டுப் படகுகளை எமது நாட்டுக்குள் அனுப்பி கொள்ளை அடிப்பதை நிறுத்த வேண்டும். இது ஒரு கேவலமான செயல். இந்திய அரசாங்கம் வல்லரசாக இருந்து கொண்டு ஒரு சிறிய நாட்டுக்குள் வந்து வளங்களை சுரண்ட முயற்சிப்பது மிக கேவலமான செயல். எனவே இந்தியா இதில் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டுமென வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் வி. சுப்ரமணியன் தெரிவித்தார்

இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டம் நடவடிக்கைகள், கொள்கை போக்கு இல்லாத காரணத்தால் பொருளாதாரப் பின்னடைவு ஏற்படுவதுடன் விலைவாசியை உயர்த்திக் கொண்டு நாடு பல கோணத்தில் திண்டாடிக் கொண்டிருந்த சமயத்திலேயே, தொடர்ச்சியாக இலங்கையில் உள்ள மீனவர்கள் அனைவரும் பல தரப்பட்ட வகையிலே பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து சவாலின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

நீண்டகாலமாகப் புரையோடிப் போயுள்ள அத்துமீறும் இந்திய மீன்பிடிப் படகுகளின் பிரச்சினைகளுக்கு இன்று வரை பல தரப்பட்ட பேச்சுகளை முன்னெடுத்தும் அதற்கு ஆக்கபூர்வமான முடிவோ தீர்வோ எட்டப்படவில்லை .

இந்தச் சூழலில் இலங்கை கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் தாக்கம் அதிகரித்து இருக்கின்றது. இந்த அரசாங்கம் வந்த பின்னர் அவர்கள் ஒரு துணிச்சலுடன் நமது கரையை அண்டிய பகுதிகளில் எமது வளங்களை அழிப்பது மட்டுமல்லாமல் தொழிலாளர்களின் தொழில் செய்யும் பொருள்களை நாசப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அதற்கப்பால் தமிழக மீனவர்களுக்கும் வடபகுதி மீனவர்களுக்கும் இடையில் முரண்பாடான சூழல் ஒன்று ஏற்பட்டு இருக்கின்றது. இது சம்பந்தமாக நாங்கள் இந்திய துணைத் தூதரிடம் சென்று முறைப்பாடுகளைத் தெரிவித்தோம். அவர்களும் இந்தச் சந்தர்ப்பத்திலே நடந்த நிகழ்வுக்கு மனவருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்திய அரசு இழுவை மடி தொழிலை நிறுத்த காலவகாசம் கேட்டது. அதிலிருந்து யாரும் இதுவரை விடுபட்டனர் எனத் தெரியவில்லை. குறிப்பாக வடமராட்சி கிழக்கு பகுதிக்கு அண்மையாக கூப்பிடு தொலைவில் வந்து இந்திய மீனவர்கள் இழுவை மடி தொழிலை மேற்கொண்டு வருகின் றனர்.

எமது மீன்பிடி அமைச்சர் இது சம்பந்தமாக ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மக்களை உசுப்பேத்தி விட்டு அமைச்சர் பேசாமல் இருக்கின்றார்

அரசாங்கத்தை இதிலே அந்நியப்படுத்தி வைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கு இடையிலேயே ஒரு முறுகல் நிலையை தொடர்ந்து வைத்திருப்பதற்கு அமைச்சர் முயற்சிக்கிறார். அமைச்சரின் கபட நாடகத்தை விடுத்து அரசாங்கம் உடனடியாக இழுவைமடிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து நாட்டுக்குள் அத்துமீறிச் செயற்படுபவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். அவர்களை எந்த நிபந்தனை அடிப்படையிலோ நல்லிணக்க அடிப்படையிலோ விடுவிக்கக் கூடாது.

இந்திய அரசாங்கம் தமது நாட்டு படகுகளை எமது நாட்டுக்குள் அனுப்பி கொள்ளை அடிப்பதை நிறுத்த வேண்டும். இது ஒரு கேவலமான செயல். இந்திய அரசாங்கம் வல்லரசாக இருந்து கொண்டு ஒரு சிறிய நாட்டுக்குள் வந்து வளங்களை சுரண்ட முயற்சிப்பது மிக கேவலமான செயல். எனவே இந்தியா இதில் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும்.

இரண்டு அரசாங்கங்களும் பேசி உடனடியான தீர்வை இந்த விடயத்தில் எட்ட வேண்டும். இல்லாவிடில் கடலில் ரத்தக்களரி ஏற்படக்கூடிய ஒரு சூழல் ஏற்படும் என்பதை எச்சரிக்கையாக இரண்டு அரசாங்கங்களும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யார் அழைப்பு விடுத்தாலும் மீனவர்கள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு இணையத் தயாராக இருக்கின்றோம். எனக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டு இருக்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் உள்ளூரில் இழுவை மடிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் அத்துமீறும் வெளிநாட்டு மீன்பிடி படகுகளை கைது செய்யக்கோரியும் அந்தப் போராட்டம் நடைபெற உள்ளது. நானும் அதில் பங்கேற்பேன்

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முயற்சி எடுப்போம். - என்றார்.

# வீடுகளில் இருக்கும் சாதாரண நோயாளர்களும் யாழ். போதனாவுக்கு வந்து சிகிச்சை பெறலாம்!

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி அழைப்பு

கொரோனாத் தொற்றுப் பரவல் அபாயம் காரணமாக வீடுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சாதாரண நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெறலாம் என பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

யாழ்.மாவட்டத்தில் கொரோனா பரவல் அபாயம் தற்சமயம் ஓரளவு குறைவடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன.

வைத்தியசாலையின் கொரோனா விடுதிகளில் நாளொன்றுக்கு 30 இற்கும் குறைவான நோயாளர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்படுகின்ற நிலையில் மக்கள் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

மேலும் கொரோனா பரவல் அபாய நிலைமை காரணமாக வைத்தியசாலைக்கு செல்லாத சாதாரண நோயாளர்கள் மற்றும் நோய்களுக்காக மருந்துகளைப் பெற்றுக் கொண்டிருப்போர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளைப் பெற



முடியும் என மேலும் தெரிவித்தார்.

# வயதான குடிமக்கள் தொடர்பாகவும் நாம் அதிக கவனம் செலுத்துகிறோம்!

## சுகாதார அமைச்சர் கெஹெலிய சுட்டிக்காட்டு

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகின்ற வயதான குடிமக்கள் தொடர்பிலும் இலங்கை அதிக கவனம் செலுத்துகிறது என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஆனால் உலகின் சில வளர்ந்த நாடுகள், முதியவர்களுக்கு சிகிச்சை அளிக்க மறுக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற இலங்கைக்கான யுனிசெவ் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக்குடனான சந்திப்பிலேயே அமைச்சர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டினார்.

மேலும், இலங்கையில் செயற்படுத்தப்படும் திட்டங்களால் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று



நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த இலங்கைக்கான யுனிசெவ்வின் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக், இலங்கையில் கொரோனா நிலைமை மிக உயர்ந்த அமைப்பு மற்றும் நிர்வாகத்துடன் நிர்வகிக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டினார்.

மேலும், தடுப்பூசியின் வெற்றியை இப்போது இலங்கை நிரூபித்துள்ளது எனவும் கிறிஸ்டியன் ஸ்கூக் குறிப்பிட்டார்.

இதேவேளை எதிர்காலத்தில் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை மற்றும் வெற்றிகரமான கொரோனா நிர்வாகம் தொடர்பாகவும் இலங்கை மேலும் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம் என அவர் கூறியுள்ளார்.

# நீர்கொழும்பில் பெண் ஒருவர் மீது கொடூரமான முறையில் தாக்குதல்

நீர்கொழும்பில் நபர் ஒருவர் பெண் மீது கொடூரத் தாக்குதல் மேற்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்த கொடூரத் தாக்குதலில் ஈடுபட்ட மற்றுமொரு பெண் படுகாயம் அடைந்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, கிம்புலபிட்டிய பிரதேசத்தில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

அயல்வீட்டவர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கொடூரத் தாக்குதலுக்குள்ளான பெண் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் அங்கிருந்த சீ.சீ.டீ.வியில் பதிவாகியுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பாடசாலை மாணவர்களுக்கு நேற்று முதல் தடுப்பூசி செலுத்தல்

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வரும் நிலையில், 18 மற்றும் 19 வயது பாடசாலை மாணவர்களுக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

அதற்கிணங்க, மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் இந்த வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, ஹோமாகம, ஸ்ரீஜயவர்த்தனபுர, பிலியந்தல ஆகிய கல்வி வலயங்களில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 162



**409. ஐ.நாவோ அல்லது நேச நாடு ஒன்றோ தலையிட்டு தமிழ் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சாத்தியக்கூறுகள் உண்டா?**

வெளிப்படையாகவே தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்த நாடு இந்தியாதான். அது அவர்களது ஆயுதப் போராளிகளையும் உள்வாங்கி, உதவிகளும் செய்து, அவர்களுக்கான பாதுகாப்பாகவும் இருந்தது. ஆனால் 1987 களுக்குப்பின் இந்தியாவுடன் அல்லது தமிழ் நாட்டுடன் சீர்கெட்ட உறவுகள் கூட முழுமையாகத் தமிழ் மக்களால் இன்னும் சீர்திருத்தப்படவில்லை. அதைவிட தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் சந்தித்த பாரிய அழிவுகள், அட்டூழியங்களும் நடந்தும் 12 வருடங்களுக்கு மேலாகி விட்டன. ஸ்ரீலங்கா அரசு தமிழ் தேசத்தின் மேல் தனது பிடியை பலவிதத்திலும் இறுக்கி நசுக்குகின்றது. தவிர, முன்னைப் போல வன்முறைகள், கொலைகள் கட்டுக்கடங்காமல் போகும் நிலைமை இல்லை. ஆகவே, அவை சர்வதேச ஊடகங்களை வியாபிக்கவில்லை. வன்முறையற்ற




போராட்டங்கள் கூட அறிக்கைகளிலும், நாடாளுமன்றப் பேச்சுகளிலும் ஒழிய, வேறுவிதத்தில் இல்லை. அதனால் அவை அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்துவனவாகவும் இல்லை.

ஆகவே, இந்தியாவும் தன் பாதுகாப்பு, தன் வளமான இந்திய கடல் பிராந்தியம், அவற்றின்மேல் தன் அதிகாரம், தன் வர்த்தக வளர்ச்சி என்ற படிகளில் நின்றுதான் ஸ்ரீலங்காவைப் பார்க்கின்றது. தமிழ் மக்களோடு தனது நட்பைப் பேணிக் கொள்வதற்காக ஸ்ரீலங்கா அரசுக்கு மாகாணசபைகள் பற்றி சில அழுத்தங்களை இந்தியா கொடுக்கின்றதேயொழிய தமிழ் மக்களுக்காக என ஒரு ஆணித்தரமான தலையீடு உருவாகின்ற அறிகுறிகள் அங்கு இல்லை.

அப்படியான தலையீடு ஏதும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவானால் அது சர்வதேச புவியியலின் அடிப்படையில் சீனாவுடனான ஸ்ரீலங்காவின் நெருக்கத்தால், இந்தியாவுக்கும், இந்தியப் பாதுகாப்புக்கும், இந்தியப் பெருங்கடல் பிரதேசத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என்ற கணிப்பில்தான் சாத்தியங்கள் கணக்கிடப்படும்.

அப்படியான நிலையை 1981 காலங்களில் அமெரிக்காவுக்கு எதிராக இந்தியா கணித்த பொழுது தமிழரை உள்ளடக்கியதான வழிமுறைகள் கணிக்கப்பட்டன.

ஆயின், தற்சமயம் புவிசார் அரசியலினாலும், அமெரிக்காவுடனான நெருக்கத்தினாலும் சீனாவுக்கு எதிரான நடவடிக்கையாக ஏதும் தலையீடு நடப்பதானால், அதற்கு ஏணிப்படியாகத் தமிழ் மக்களைக் கருதுவார்களோ அல்லது தமிழ் மக்களுடன் அதில் ஒரு பங்கு சார் வகிபாக உறவை ஏற்படுத்திக் கொள்வார்களா என்பதைப் பொறுத்து உள்ளது. அமெரிக்கா,இந்தியா இரண்டுமே தங்களது வர்த்தக நலன்களை கேந்திரமாக கொண்டு செயற்படுகின்றன. மனிதாபிமானம் இரண்டாம் பட்சமே. இந்திராவோ அல்லது அவர்களது வாரிசோ அல்லர் மோடி.

**410. அப்படியானால் நோர்வே?**

நோர்வே ஒரு வல்லரசு நாடு அல்ல. அது சிறிய, மனச்சாட்சி கொண்ட நாடு. எதனையும் ஒரு நட்புறவின் மூலம் வல்லரசுகளின் அனுசரணையுடன் தான் சாதிக்கலாம்ஷ்னக் கருதும் தேசம். அது ஒரு சமாதானத் தூதுவனாக ஸ்ரீலங்கா அரசினாலும் விடுதலைப் புலிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இங்கு அரசியல் தீர்வுக்காகப் பாடுபட்டது. தமிழ்மக்களையொட்டி அதற்குக் கரிசனையும் அபிமானமும் இருந்தாலும், இந்தியப்பெருங்கடல் பிரதேசத்தில் இந்தியாவை மீறி நோர்வேயோ வேறு எந்த ஒரு நாடோ தலையீடு செய்யத் தயங்கும். நோர்வே தங்களின் அனுபவங்களை ஆராய்ந்து, இன்னும் ஒரு முறை ஈடுபட விரும்புவார்களா, ஸ்ரீலங்கா அதனை ஏற்குமா என்பவை எல்லாம் பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியவை.

விடுதலைப் புலிகள் போல பேச்சுவார்த்தைகளை மேலெடுத்து, தங்களைப் பலப்படுத்திக் கொள்ள செய்து கொள்ளக்கூடிய உத்திகளில் தமிழ் மக்கள் இப்போது இல்லை.

அதனைச் சந்தர்ப்பமாகப் பாவித்து காலம் பெறுவதற்கும், இந்தியாவை விலக்கி வைக்கவும், தமிழ்க் கட்சிகளோடு ஸ்ரீலங்கா சில முன்னெடுப்புகளைச் செய்யலாம் அதன் தாற்பரியங்களை உணர்ந்து கொள்வது தமிழ் மக்களின் கடமை.

**411. அப்படியானால் அமெரிக்கா?**

அமெரிக்கா மட்டுமல்ல, தமிழ் மக்களின் இன்றைய நிலைக்குத் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டிய பிரித்தானியா பற்றியும் முள்ளிவாய்க்கால் நாள்களில் தமிழ் மக்கள் அனுபவம் கண்டார்கள். அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின் விடுதலைப் புலிகளையும் பயங்கரவாதிகளாக பிரகடனப்படுத்தி, தனது அதிகாரத்தை உலகில் நிலைப்படுத்த முயன்ற காலங்களில், அமெரிக்காவின் மாநிலங்களில் ஒன்றான மசாசூட்ஸின் ஈழத் தமிழர் தொடர்பான தீர்மானம் அமெரிக்கக் காங்கிரஸின் கைகளில் இருந்தது. ஓரளவு பலம் வாய்ந்த புலம்பெயர் மக்கள், தமிழ் மக்களுக்கு ஆதரவாக காங்கிரஸுக்கும் நாடு ரீதியிலும் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். சீனாவைத் தன் வியாபார நலன்களுக்காகவும் வல்லரசு நிலைக்குமாக மட்டுப்படுத்த வேண்டும் என திட்டங்கள் தீட்டிய அமெரிக்கா அப்போது மஹிந்த ராஜபக்ஷ தன் பணிப்புரைகளை ஏற்க, அவரின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் உதவிக்கு முன் நின்றது அமெரிக்கா. அதற்கான சன்மானம் ஸ்ரீலங்கா தங்களையும் மேற்குலக நாடுகளையும் இந்தியாவையும் மீறி சீனாவை வளர்க்காது என்ற உத்தரவாதங்கள்தான்.

ஸ்ரீலங்கா சிறிய நாடானாலும் தனதுராஜதந்திரங்களினால் சர்வதேச நாடுகளிடையே தந்திரமான அணுகுமுறையை ஏற்படுத்தி, தனது அரசியல் திட்டங்களில் உறுதியாக இருக்கிறது.

தற்பொழுது தங்களது வர்த்தக நலன் சார்ந்து, அமெரிக்கா மேற்குலக நாடுகளுடன் – இந்தியா உட்பட – சேர்ந்து, தமிழ் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களையும் மனித உரிமை மீறல்களையும் கையிலெடுத்து, அபிமானம் காட்டி சீனாவை கட்டுப்படுத்த முயல்கின்றது.

திரும்பவும் தமிழ் மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் அமெரிக்க காங்கிரஸில் தீர்மானம் வைக்கப்பட்டுள்ளது. அது எவ்வளவு தூரம் ஆழமாக நடைமுறைப்படுத்தப்படும் என்பது சீன அரசியலில் தங்கி உள்ளதே ஒழிய, தமிழ் மக்கள் கைகளில் இல்லை.

தமிழ் மக்களது நிலை அவற்றில் ஆக்கப்படும் கறியின் உப்பு அல்ல. வாசத்திற்கான கருவேப்பிலைதான். அவை தமிழ் மக்களுக்கும் தலைவர்களுக்கும் வசதியானதும் கூட. ஏனென்றால் அவர்கள் போராடத் தேவையில்லை. பிறர் ஏதும் செய்வார்கள், அதில் பகிர்ந்து உண்ணலாம் என்ற மனப்பாங்குதான். நாடாளுமன்றங்கள் இருக்கும் வரை அதுதான் நிலைமை.

(வளரும்......)



‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** முகநூலில் சுமந்திர னின் விவசாயி வேடம் பார்த்தீர்களா?

**பதில் :-** அந்தக் கண்றாவியை நானும் பார்த்துத் தொலைத்தேன். அது மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து வந்த ‘மீம்ஸ்’களையும் பார்த்து ரசித்தேன். வயல் உழவும், நெல் விதைக்கவும் இங்கு பலபேர் இருக்கிறார்கள். சுமந்திரன் தன் வேலையைச் சரியாய்ப் பார்த்தாலே போதுமானது. சுமந்திரனை யாரோ தவறாக வழிப்படுத்த முனைகிறார்கள் போலத் தெரிகிறது. இந்த நாடக வேலை எல்லாம் நம் மண்ணில் ஒரு நாளும் எடுபடாது. அறிவாளியாய்த் தன்னை அடையாளப்படுத்தியிருக்கும் சுமந்திரனுக்கு இந்த மாறுவேடப் போட்டியெல்லாம் மிகை என்பதுதான் என் கருத்து.

**உலகநாதரின் ஒப்பீனியன் * “நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நானும் உந்தன் ‘வீடு’ அகத்தே புகுந்திடுமான் மிகப்பெரிதும் விளைகின்றேன்” - ‘மச்சான்ஸ்’ திருவாச்சகம் எப்பூபூபூடி...!**

## “சுமந்திரனை யாரோ தவறாக வழிப்படுத்த முனைகிறார்கள் போலத் தெரிகிறது.”

**2. கேள்வி:-** நல்லூர் எஜமானது மறைவையொட்டிய உங்களது எண்ணங்களைப் பதிவு செய்யுங்களேன்?

**பதில் :-** ஆலய தர்மகர்த்தாக்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான ஒரு ‘மொடல்’ வடிவத்தை உருவாக்கியவர் அவர். எஜமான் என்ற வார்த்தைக்குத் ‘தொண்டன்’ எனும் புது அர்த்தத்தைக் கொடுத்த புரட்சிமனிதர். கோயிலுக்குள் தன்னையும், தனக்குள் கோயிலையும் அமைத்துக் கொண்ட உண்மை பக்தர். முருகனைக் கேட்டு நிர்வாகம் நடத்திய முதல் தர்மகர்த்தா. முருகன் தம்மைக் காக்க வேண்டும் என்று நினைப்போர் மத்தியில், தான் முருகனைக் காக்க வேண்டுமே எனும் தவிப்போடு வாழ்ந்தவர். கோயிலின் நன்மைக்காக உலகையும், உறவையும் துறந்து வாழ்ந்த ஒப்பற்ற மனிதர். அடக்கத்தோடு ஆளுமையும் காட்டத் தெரிந்த அதிசயர். அர்ச்சனைக் கட்டணத்தை இன்றுவரை ஒரு ரூபாவுக்கு மேல் உயர்த்தாத ஏழைப் பங்காளர். தேவலோகத்திலும் கிடைக்க முடியாத கௌரவத் தோற்றத்தினை முருகனுக்கு ஆண்டுதோறும் கொடுக்கும் ‘மேக்கப்மான்’. மௌனத்தின் பெருமை உணர்ந்து - உணர்த்திய மஹோன்னதர். ஆலய நிர்வாகக் கட்டுப் பாடுகளை எப்பேர்ப்பட்ட சக்திக்கும் விட்டுக் கொடுக்காத வீரியர். முருகனிடம் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்த முழுமனிதர். கோயிலைப் பொறுப் பெடுத்த நாள் முதல், தான் வகித்த உயர் பதவியையும் துறந்துவிட்டுக் கோயிலே கதி என்று வாழ்ந்த இல்லறத்துறவி. கையில் ஒரு தனிக்குடையும் கரை யில்லா வேட்டியுமாய்க் காலம் கழித்த இன்னொரு ‘குடைச்சாமியார்’. தன் கண்ணில் படும் நல்லவற்றையெல்லாம் முருகனுக்காய் ஆக்கியும், ஆக்கியவற்றில் ஏதேனும் குறை கண்டால் உடனே அவற்றை நீக்கியும் செயலாற்றிய துணிவாளர். ‘கிரியையில் ஞானம்’ என்று சொல்லப்படும் வழிபாட்டு நிலைக்கு உதாரணமாகத் திகழ்ந்த ஒரே மனிதர்.



அதனால்தான் அவரால் கிரியைகளை மரபு தவறாமல் பேணவும் முடிந்தது. தேவை ஏற்பட்டபொழுது அவற்றை மீறவும் முடிந்தது. ‘அர்ச்சனைக் கட்டணத்தை உயர்த்தி அதன் மூலம் வரும் வருமானத்தின் ஒரு பகுதியை எங்களுக்குத் தாருங்கள்!’ என இயக்கங்கள் நிர்ப்பந்தித்தபோது, ‘அது அடியார்கள் முருகனுக்குத் தரும் பணம், என் கையால் அதனை வேறு தேவைகளுக்கு எடுத் துத் தரமாட்டேன்! வேண்டுமானால் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்’ என்று சொல்லி சாவிக் கொத்தை எடுத்து நீட்டிய விறல் மிக்க வீரர். வல்லதோர் வித்தை உருவாக்கித் தந்துவிட்டு வழிப்பயணம் சென்றிருக்கிறார். முருகனும் சில நிமிடம் அழுதிருப்பானோ! என்று எண்ணத் தோன்றுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ‘அத்தனையும் சத்திய வார்த்தைகள்’**

**3. கேள்வி:-** சுமந்திரனை இந்த அளவு புகழ்கிறீர்கள். பலரது எதிர்ப்பையும் தாண்டி ஆதரிக்கிறீர்கள். ஓர் இலக் கியவாதியாய் உங்கள் மனச்சாட்சியில் கை வைத்துச் சொல்லுங்கள். உங்கள் கண்ணுக்கு அவரில் எந்தக்குறைகளும் தெரியவில்லையா?

**பதில் :-** ஏன் தெரியாமல்? தாராளமாகத் தெரிகின்றன. அதுபற்றி முன்னைய என்னுடைய அரசியல் கட்டுரைகளில் தெளிவாக எழுதியும் இருக்கிறேன். சுமந்திரன் மீதான என்னுடைய ஆதரவு ‘ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூச் சர்க்கரையேனும் வேண்டும்’ எனும் கொள்கையால் விளைந்ததுதான். இன்றைய நிலையில் சுமந்திரனது தேவையை நிரப்பக் கூடிய ஒருவர், கட்சிக்குள் மட்டுமல்ல நம் இனத்திற்குள்ளேயே இருப்பதாய் என் கண்ணுக்கெட்டியதூரம் வரைத் தெரியவில்லை. இனத்தின் முன்னேற்றத்திற்கு அவரது ஆற்றல் அவசியமானதால்தான் நான் அவரைத் தொடர்ந்து வழி மொழிந்து கொண்டிருக்கிறேன்.

ஒரு தலைவனிடம் செருக்கு, சினம், மிகுதியான காமம், உலோபம், முடிக்க முடியாததாயினும் தான் நினைப்பதை முடித்தே தீருவேன் எனும் பிடிவாத அதிமானம் ஆகிய ஆறு குற்றங்களும் இருக்கக்கூடாது என்கிறார் வள்ளுவர். சுமந்திரனிடம் இக்குற்றங்களில் சில இருப்பதாய்த்தான் தோன்றுகின்றது.

குறை என்று பார்த்தால், மற்றவர்களை அணைத்துச் செல்லத் தெரியாததுதான் அவரது முதல் குறையாகிறது. கட்சிக்குள் இருக்கும் மற்றவர்களை விடதான் அறிவாளி என அவர் நினைக்கிறார். அந்த நினைப்பில் பிழை இருப்பதாய்ச் சொல்லமாட்டேன். ஆனால் ஒரு நல்ல அறிவாளி தன் நிலையினின்றும் இறங்கி வந்து பலரையும் தன்னோடு அணைத்துச் செல்லவே விரும்புவான். அறிவைக் காரணமாய் வைத்து வீணாகப் பகை தேட ஒருநாளும் விரும்பமாட்டான். சுமந்திரன் தெரிந்து கொள்ள வேண்டிய முதல் விடயம் இது.

## “எஜமான் என்ற வார்த்தைக்குத் ‘தொண்டன்’ எனும் புது அர்த்தத்தைக் கொடுத்த புரட்சி மனிதர்.”

கட்சிக்குள் இருக்கும் மற்றைத் தலைவர்களை உதாசீனப்படுத்தி நடத்தும் சுமந்திரனது இயல்பு மிகத்தவறானது. அந்தப்போக்கு ஜனநாயகத்திற்கு ஒருநாளும் சரிவராது. மற்றவர்களை உதாசீனப்படுத்துவதன் மூலம் அவர் எதனைச் சாதிக்க விரும்புகிறார் என்று தெரியவில்லை. இன்றைய அவரது பகைக்கெல்லாம் இந்த இயல்புதான் காரணம் என்று தோன்றுகிறது.

அண்மையில் நடந்த ஐ.நாவின் மனித உரிமைப் பேரவைக்குத் தன்னால் எழுதப்பட்ட கடிதத்தைக் கடைசி நேரம் வரை வைத்திருந்துவிட்டுப் பின்னர் கட்சி உறுப்பினர்களுக்கு அதனைச் சாட்டுக் காய்த் தெரிவித்ததும், அதுபற்றி ஆராய வேண்டும் என அவர்கள் கேட்டுக் கொண்டபோது, அக்கடிதம் ஏலவே அனுப் பப்பட்டுவிட்டதாகச் சொன்னதுமான சுமந்திரனின் செயல் உடன் நிற்கும் தலைவர்களை அலட்சியப்படுத்தியமைக்கான கடைசிச் சான்று.

முன்னரும் இதுபோல் பலதரம் நடந்ததாய் மக்களும் முறையிடுகிறார்கள். அருந்தவபாலன் அதிகவாக்குப் பெற்றும் தோற்றுப்போன நிலையில் ஊர்மக்கள் எல்லாம் அவருக்கு நியமனப் பதவியையாவது வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, பதவிக்காலத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை அவருக்கு வழங்குவதாக மக்கள் மத்தியில் வாக்களித்துவிட்டு அந்த வாக்கைக் கடைசிவரை அலட்சியப்படுத்தியபோதும் அச்செயலுக்குக் காரணமானவராய் சுமந்திரனே முன்னிறுத்தப்பட்டார். இப்படி எத்தனையோ உதாரணங்கள்.

## “இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கிறார் சம்பந்தர்.”

சம்பந்தன் ஐயாவின் தட்டிக்கொடுத்தலே அவரை இப்போக்கில் மிகையாய் இயங்க வைப்பதாய்த் தோன்றுகிறது. தனது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள சுமந்திரனையும் தட்டிக் கொடுத்து, மற்றவர்கள் முறையிட்டால் அவர்களையும் தட்டிக்கொடுத்து இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கிறார் சம்பந்தர். இது அவரது கட்சிக்கு மட்டுமன்றி, நம் இனத்திற்கும் உகந்ததல்ல என்பது உறுதி.

சம்பந்தரின் ஆதரவை நம்பிச் சுமந்திரன் இன்று எல்லா நட்பையும் இழந்து நிற்கிறார். என் ஆற்றலுக்கு முன் இவர்கள் சிறுபகைவர்கள் தானே எனும் நினைப்பால்,

தன்னுடைய பகைவர் ’லிஸ்ரை’ அவர் நீட்டித்துக் கொண்டேயிருக்கிறார். சம்பந்தர் ஐயாவினுடைய இருக்கை காலியாகிற பொழுது, மற்றவர்களால் தான் அரசியல் அனாதையாகிற நிலைமையை அடையலாம் என்பதனைப் பற்றிச் சுமந்திரன் ஆழச் சிந்திக்கவேண்டும்.

பிரச்சினைகளைத் தன் தலையில் கட்டிவிட்டு, ஒவ்வொரு முறையும் சம்பந்தர் தப்பித்துக்கொள்வதை சுமந்திரன் இதுவரை உணராதிருப்பது அதிசயம் தான். அவர் அதனை, உடனடியாகப் புரிந்துகொள்ளாவிட்டால் அது அவரது அரசியல் வாழ்வுக்குக் கேடுவிளைவிக்கும் என்பது நிச்சயம்.

இது ஓர் ஜனநாயகக் கட்சிதானா? என மற்றவர்கள் நினைக்கும் வண்ணம்,

(08ஆம் பக்கம் பார்க்க)



# பாட்டும் நானே? ...




(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்னுடைய பகைவர் 'லிஸ்ரை' அவர் நீடித்துக் கொண்டேயிருக்கிறார். சம்பந்தர் ஐயாவினுடைய இருக்கை காலியாகிற பொழுது, மற்றவர்களால் தான் அரசியல் அனாதையாகிற நிலைமையை அடையலாம் என்பதனைப் பற்றிச் சுமந்திரன் ஆழச் சிந்திக்க வேண்டும்.

பிரச்சினைகளைத் தன் தலையில் கட்டிவிட்டு, ஒவ்வொரு முறையும் சம்பந்தர் தப்பித்துக்கொள் வதை சுமந்திரன் இதுவரை உணராதிருப்பது அதிசயம்தான். அவர் அதனை, உடனடியாகப் புரிந்து கொள்ளாவிட்டால் அது அவரது அரசியல் வாழ்வுக்குக் கேடுவிளைவிக்கும் என்பது நிச்சயம்.

## "ஜனநாயக அமைப்பில் நான் என்று இயங்குவதைவிட நாம் என்று இயங்குவதுதான் பொருத்தமானதாய் இருக்கும்."

இது ஓர் ஜனநாயகக் கட்சிதானா? என மற்றவர்கள் நினைக்கும் வண்ணம், தம்மோடு இணைந்தவர்களை ஓர் பொருட்டாயும் மதியாமல் முடிவுகளை எடுப்பதும், அம்முடிவுகளைச் சுமந்திரனைக் கொண்டு அறிவிப்பதுமாக, கூட்டமைப்புக்குள் சம்பந்தர் செய்து வரும் சர்வாதிகார நாடகம் மிகத் தவறானது. பிரச்சினைகள் வரும்போது அப் பழியினைச் சுமந்திரனின் தலையில் ஏற்றி, வருங்காலத்தில் மிளிரக்கூடிய, இனத்திற்குத் தேவையான ஒரு தலைவனைப் பலரும் வெறுக்கும்படி செய்திருக்கும் சம்பந்தரது செயற்பாடு மிகவும் கண்டிக்கத்தக்கதாம்.

தான் இருக்கும் காலம் வரை 'பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டி', தன் தலைமையை நிலைநிறுத்த அவர் நினைப்பது கேவலத்திலும் கேவலம். அவரது இந்தச் சுயநலத்திட்டத்திற்கு அறிவாளியான சுமந்திரன் பலியாகி வருவது ஆச்சரியம் தருகிறது.

தனித்தனிப் பேசிப்பார்த்தால் எல்லாத் தலைவர்களும் சுமந்திரனின் தேவையை ஒத்துக் கொள்கிறார்கள். சம்பந்தரை நம்பி மற்றவர்களை மதிக்காத அவரது 'விட்டேத்தியான' குணத்தினால்தான் அவர்கள் அவரை எதிர்க்கிறார்கள் என்பது தெரிகிறது. அக்காரணத்தில் உண்மையும் இருப்பதாகவே படுகிறது. அங்ஙனம் சுமந்திரனைப் பின்னின்று இயங்க வைக்கும் சம்பந்தரிடமே சென்று பாதிக்கப்பட்டவர்கள் முறையிடுவது தான் பெரிய வேடிக்கை.

எவ்வளவுதான் தனிமனித ஆற்றல் இருந்தாலும் ஜனநாயக அமைப்பில் நான் என்று இயங்குவதை விட நாம் என்று இயங்குவதுதான் பொருத்தமான தாய் இருக்கும். இதனைச் சம்பந்தர் விளங்குகிறாரோ இல்லையோ அறிவாற்றல் மிக்க சுமந்திரன் விளங்கி, மிகவிரைவில் அதனை நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும்.

ஜனநாயக ஆட்சியில் மக்கள் முட்டாள்களாக இயங்கினாலும்கூட அவர்கள் தான் ஆட்சியைத் தீர்மா னிக்கும் சக்திகளாக இருப்பர் எனும் அடிப்படை உண் மையைச் சுமந்திரன் புரிந்து கொள்வது அவசியமாம்.

மக்களின் உணர்வைப் புரியாத சுமந்திரனின் இயல்புக்கு, புலிகள்மேல் அவர் அடிக்கடி ஆற்றிவரும் எதிர்வினைகள் இன்னொரு சான்றாகிறது. சுமந்திரனைத் தமிழ்மக்களின் எதிரிபோல் காட்ட அவரது எதிரிகளுக்கு இந்த விடயம்தான் பெரிதும் பயன்பட்டது.

புலிகள்பற்றிய அவரது கருத்துக்கள் சரியா? பிழையா? என்பது இன்றைய நிலையில் தேவையில்லாத விட யம் என்பது என் கருத்து.

எனக்கு ஒன்று புரியவில்லை. தனிப்பட்ட ரீதியில் புலிகளால் சுமந்திரன் பாதிப்புற்றதாக செய்திகள் ஏதும் இல்லை. பின்னர் ஏன் தேவையில்லாமல் அவர்கள் பற்றி எதிர்க்கருத்துக்களை விதைத்து மக்களின் பகையை அவர் சம்பாதிக்கிறார் என்பது பெருங்கேள் வியாக எழுகிறது. வேறு எவரேனும் போட்டுக் கொடுத்த 'சிலபஸ்ஸின்' படி அவர் நடக்கிறாரோ என்று ஐயம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

சுமந்திரன் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். 'புலிகள்' என்பது பிரபாகரனை மட்டும் குறிக்கும் ஒரு சொல் அல்ல. அது பல இளைஞர்களின் தியாகத்தைக் குறிக்கும் ஒரு சொல். எத்தனையோ இளைஞர்கள், தம் உணர்ச்சிகளை எல்லாம் மழுங்கடித்து எம் இன விடுதலைக்காகத் துறவிகளிலும் மேலாக நின்று தம் உயிரையும் பொருட்படுத்தாமல் செயற்பட்டிருக்கிறார்கள். அதனால்தான் புலிகளால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கூட புலிகளுக்கான தம் ஆதரவை இன்றும் மாற்றிக் கொள்ளவில்லை. இந்தத் தியாகப் பதிவை இன்னும் பல தசாப்தங்களுக்குத் தமிழினம் மறக்கப்போவதில்லை என்பது சத்தியமான உண்மை.

## "இந்திய வெளி விவகாரச் செயலாளர் இங்குள்ளோர்க்கு 'வாசகதீட்சை' அளித்து பக்குவப்படுத்தி இருக்கிறார்."

இந்நிலையில் பதவி சார்ந்து, தமிழ் மக்களின் அரசியலுக்குள் நுழைந்த சுமந்திரன் போராளிகளின் மேல் வைக்கும் விமர்சனங்கள் அவருக்குப் பொது மக்களின் எதிர்ப்பைத் தேடித் தருமேயன்றி, வேறு எந்தப் பயனையும் தரப்போவதில்லை.

அவரது இச்செயலையும், மக்களின் நாடி பிடிக்கத் தெரியாத செயல் என்றே கருதவேண்டியிருக்கிறது. அவரது விமர்சனங்கள் முழுவதும் பிழையானவை என்றும் நான் சொல்லமாட்டேன். ஆனால் இந்த விமர்சனங்களை, அவர் காலம் அறியாது வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது தான் பிரச்சினை.

மேற்சொன்ன விடயங்கள் பற்றிச் சுமந்திரன் மீளாய்வு செய்தே ஆகவேண்டும். அவர் மக்களின் எதிர்ப்பைத் தேடிக்கொள்வது என்பது அவரது எதிர்கால அரசியல் வாழ்வுக்கு மட்டுமன்றி, நம் இனத்தின் எதிர்காலத்திற்கும் உகந்ததல்ல எனும் எண்ணத்தால்த்தான் இவற்றைப் பகிர்ந்து கொள்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'பழி ஓரிடம் பாவம் ஓரிடமுங்கோ'ஹி..ஹி..ஹி..**

**4. கேள்வி:-** புலம்பெயர் தமிழர்களை ஆட்சிக்கு வந்ததும் அலட்சியப்படுத்திய நம் ஜனாதிபதி, இப் போது ஐ.நா.சபை உரையில் அவர்களை வெற்றிலை வைத்து வரவேற்கிறாரே. இதனால் மானம் போவது கூடவா அவருக்குத் தெரியவில்லை?

**பதில் :-** 'மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை - தேனின் கசிவந்த செல்லியர் பால் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்து போம்'. என்று நம் தமிழ்க்கிழவி எப்பொழுதோ சொல்லிவிட்டாள். இப்பொழுது ஜனாதிபதி உரையில் 'மானம்' மட்டும்தான் பறந்திருக்கிறது. இன்றைய நிலை தொடர்ந்தால் மிச்ச ஒன்பதும் கூட



விரைவில் பறப்பதைப் பார்க்கலாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் *'ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினவன் மண்ணுக்குள்ளே போன கதை உனக்குத் தெரியுமா?'**

**5. கேள்வி:-** சீனாவின் பக்கமாகப் பறந்து கொண்டிருந்த இலங்கைக் கொடி மீண்டும் மெல்ல மெல்ல இந்தியாவின் பக்கமாய்ப் பறக்கத் தொடங்கியிருக்கு மாப் போல் தோன்றுகிறதே?

**பதில் :-** பறக்குமாப் போல் தோன்றுகிறது என்பது பிழையான தொடர். அதில் ஐயக் கருத்துப் பொதிந்திருக்கிறது. இன்று ஐயத்திற்கே இடமில்லாமல் இந்தியாவை நோக்கி இலங்கைக் கொடி பறக்கத் தொடங்கியிருப்பது வெளிப்படை.

இந்தியாவின் மௌனத்தின் ஆற்றலும் அதன் இயங்கு பலமும் இப்பொழுதுதான் நம் ஆட்சியாளர்க ளுக்குத் தெரியத் தொடங்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். இலங்கையின் சில முன்னாள் பிரத மர்களும், ஜனாதிபதிகளும் இந்தியாவை விட்டு வில கப்பார்த்துத் தோற்று அடங்கிப் போன அனுபவத்தை நம் ஆட்சியாளர்கள் மறந்தது அதிசயம்தான்! அந் நாளில் அமெரிக்கச் சார்பெடுக்க முனைந்த முன்னாள் ஜனாதிபதி 'ஜே.ஆரை' படை பட்டாளத்துடன் வந்து உட்காரவைத்து ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடச் செய்ததை, இவர்கள் எப்படித்தான் மறந்தார்களோ?

பிராந்திய வல்லரசாக மாறிவரும் இந்தியாவைப் பகைக்க நினைத்தது முட்டாள்தனத்தின் உச்சநிலை. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் இங்குள்ளோர்க்கு 'வாசகதீட்சை' அளித்து பக்குவப்படுத்தி இருக்கிறார். அதனால்தான் கொடி மாறிப் பறக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'ஸ்பரிச தீட்சை' நடப்பதற்கு முன் திருந்தினால் நல்லது.**

**6. கேள்வி:-** சிறிதரன் எம்.பி, 'மாவை' தான் அடுத்த வடமாகாண முதலமைச்சராய் வரவேண்டும் என்கிறாரே?

## "மீண்டும் ஒருதரம் மாகாணசபை தோல் வியுற வேண்டும் என்பதுதான் சிறிதரனின் விருப்பமா?"



**பதில் :-** மக்கள் ஆதரவு பெற்ற சிறிதரனால் மக்களின் உணர்வு புரியாமல் இதுபோல எப்படிப் பேச முடிகிறது? நம் தலைவர்களுக்கு இனத்தின் முன்னேற்றம் பற்றிய எந்தக் கவலையும் இருப்பதாய்த் தெரியவில்லை. ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவருக்கு இப்பதவியை வழங்கவேண்டிய தேவைதான் என்ன? இனத்தை உயர்த்தவேண்டிய பதவிகளை, அதற்கான தகுதியுள்ளவர்களுக்கு வழங்காமல் தத்தம் உறவுகளைப் பேணுதற்கான பரிசுப்பொருள்களாய் இவர்கள் நினைக்கிறார்கள். இதுவும் ஒருவகையில் இனத்துரோகம் தான். மீண்டும் ஒருதரம் மாகாணசபை தோல்வியுற வேண்டும் என்பதுதான் சிறிதரனின் விருப்பமா?

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன்' என்ற கதைதான் பாருங்கோ இது.**

(முற்றும்)

# கேதார கௌரி விரதம் உணர்த்தும் வாழ்வியல் தத்துவம்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

எங்கள் சமயம் - தத்துவங்கள் பலவற்றைக் கொண்டு விளங்குகிறது. தத்துவங்களை நேரடியாகச் சொன்னால் பலருக்கும் விளங்க மாட்டாது என்ற காரணத்தால் அவற்றை யாவரும் உள்ளத்தில் இருக்கும் வகையில் கதை வடிவத்தில் தந்து நிற்கிறது. எங்கள் சமயத்தில் பல புராணங்கள் இருக்கின்றன. புராணங்கள் தத்துவங்களை விளக்கும் கதை வடிவங்கள் என்பதையும் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். புராணக் கதைகள் பலவும் தெய்வீகம் சம்பந்தப்பட்டே ஆக்கப்பட்டன.

ஆரம்பகாலத்தில் மக்கள் மனதில் நல்லொழுக்கத்தை , நல்ல சிந்தனையை ஏற்படுத்த பெரிதும் கைகொடுத்து நின்றன கதைகளேயாகும். கதைகள் என்பது பழைய காலந்தொட்டு பாரம்பரியச் சொத்தாகவே அமைந்து வருகிறது எனலாம். அந்தக்கதைகளில் இடம்பெறும் சம்பவங்கள் உண்மையா பொய்யா என்று ஆராய்வது உகந்தது அல்ல. ஏனென்றால் கதைகள் கற்பனையின் பெறுபேறு எனலாம். ஆனால் அந்தக் கற்பனைக்குள் பொதிந்திருக்கும் கருதான் எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாக வாழ்வினை எப்படி வாழவேண்டும் என்பதற்கு ஆணிவேராக அமைகிறது என்பதையும் கவனத்தில் இருத்தல் அவசியமாகும்.



புராணக்கதைகள் எங்களுக்குப் புகட்டும் பாடங்களையே எடுத்துக் கொள்ள வேண்டும். புராணக்கதைகளில் தெய்வ அம்சங்களைப் புகுத்தியதற்கு முக்கிய காரணமே யாவரும் பயபக்தியுடன் நோக்குவார்கள் என்பதேயாகும். தெய்வம் என்றால்த்தான் யாவரும் சிரத்தையுடன் செயற்படுவார்கள் என்று எமது முன்னோர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கை மனிதன் பூமியில் வாழும் வரை தொடர்ந்த படியேதான் இருக்கும்.

**நம்பினார்க் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு
நல்லவர்க்கும் ஏழையர்க்கும் ஆண்டனே காப்பு
பசிக்கு விருந்தாவான் நோய்க்கு மருந்தாவான்**

இது தெய்வத்தின் மீதான அசையாத நம்பிக்கை எனலாம். நம்பிக்கை என்பதே இங்கு மிகவும் முக்கியமாகும். இந்த அடிப்படையில் தான் எங்கள் சமயம் பலவிதமான விரதங்களைக் காட்டி நிற்கிறது.

விரதம் என்றால் என்ன? பசித்திருப்பது. தனித்திருப்பது , விழித்திருப்பது என்றும் சொல்லப்படுகிறது. அதே வேளை மனத்தை ஒரு நிலைப்படுத்தி ஒரே நோக்கோடு இருப்பது என்றும் சொல்லப்படுகிறது. இரண்டுமே வாழ்வில் நன்மைக்கு வழிவகுக்கும் என்பதால் இரண்டுமே பொருந்தும் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

விரதங்கள் என்று பார்க்கும் பொழுது எங்கள் சமயமானது நாளுக்கான விரதம். வாரத்துக்கான விரதம், மாதத்துக்கான விரதம் என்று வருடம் முழுவதுக்குமே விரதங்கள் பல அமையுமாறு வழி வகுத்து விட்டிருக்கிறது. வருடம் முழுவதும் தெய்வீக சிந்தனையுடன் மனத்தை வைத்திருக்க வேண்டும் என்பதுதான் இதன் அடிப்படை எனலாம்.



இன்பமும், துன்பமும், கலந்ததுதான் இந்த உலக வாழ்க்கையாகும். நம்முடைய முன்வினைப் பயன்களே இன்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணமாய் அமைகிறது என்பதுதான் சமயத்தின் நிலையாகும். இப்படியான வினைகளிலிருந்து விடுபட்டு இன்பங்களைப் பெருக்கிக்கொள்ள அமைந்த வழிதான் விரதங்கள் எனலாம்.

இறைவனை எப்பொழுதுமே சிந்தையில் நிறுத்திக் கொள்ளுவது என்பது ஞானிகளுக்கு எளிதானதாகும். இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுக்கு இது அவ்வளவு எளிதன்று. எனவேதான் ஒரு குறிப்பிட்ட நாள்களை நிர்ணயித்துக் காட்டிய பாதைதான் விரதங்களாக வந்து அமைந்திருக்கின்றன என்பது மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

சிவனைக் குறிக்க கார்த்திகைச் சோமவார விரதம், கார்த்திகை உமா மகேஸ்வர விரதம், மார்கழி திருவாதிரை விரதம், தைமாத சூல விரதம், மாசிமாத மகா சிவராத்திரி விரதம் , பங்குனி உத்தரத் திருக்கல்யாண விரதம், வைகாசிமாத அஷ்டமி ரிஷப விரதம், ஐப்பசி மாத கேதார கௌரி விரதம் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. நவராத்திரி நிறைவு பெறும் விஜயதசமி அன்று கேதார கௌரி விரதம் ஆரம்பமாகி இருபத்தொரு நாள்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. நவராத்திரி நிறைவில் ஆரம்பித்து தீபாவளி அன்று இவ்விரதம் நிறைவுறுகிறது. நவராத்திரியில் பெண்மை போற்றப்படுகிறது. கௌரிவிரதத்திலும் பெண்மை போற்றப்படுகிறது. தீபாவளிக்கும் அடிப்படையின் பெண்மையான சக்தி என்பதும் நோக்கத்தக்கதேயாகும். மூன்றுமே சக்தியுடன் இணைந்து பெண்மைக்கு, தாய்மைக்கு முக்கியத்தைக் கொடுக்கிறது என்பது வாழ்வியலுடன் இணைகிறது அல்லவா ?

சிவனும் பார்வதியும் கயிலாயத்தில் இருக்கும் பொழுது தரிசனம் செய்வதற்கு பிருங்கி முனிவர் அங்கு வருகிறார். வந்தவர் சிவனை மட்டுமே வலம்வந்து வணங்கி நிற்கிறார். பிருங்கி முனிவர் சிவனைமட்டுமே வணங்கியது எதற்காக என்று பார்வதி சிவனிடம் வினவுகிறார். உலகத்தின் இயக்கத்தையே உணர்ந்த சிவன் பார்வதியின் உள்ளக்கிடக்கையினை அவரின் வினாவினால் உணந்து கொண்டார். அன்பும் சிவமும் இரண்டல்ல ஒன்றேதான் என்பது போல - சிவனும் சக்தியும் இரண்டல்ல ஒன்றேதான் என்று எண்ணினார். இறைவன் நினைப்பு பார்வதிதேவியிடம் பதிந்தது. பார்வதி தேவியார் இறைவனைக் குறித்து இருபத்தொரு நாள்கள் விரதம் இருந்தார். பார்வதியின் விரதத்தைக் கண்ணுற்ற சிவன் அவர்முன் தோன்றி உனக்கு வேண்டியதைக் கேள் என்றார். இந்த உலகில் ஆண்களும் பெண்களும் சமம் என்பதை உணர்த்த, உலகின் முதல்வனான நீங்கள் உங்களில் பாதியை எனக்குத் தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இறைவனும் தன்னுடம்பில் பாதியை அன்னை பார்வதிக்கு கொடுத்து சிவனும் சக்தியும் ஒன்றே என்னும் நிலையினை ஆக்கினார்.

> **“ புராணக்கதைகள் எங்களுக்குப் புகட்டும் பாடங்களையே எடுத்துக் கொள்ள வேண்டும். புராணக்கதைகளில் தெய்வ அம்சங்களைப் புகுத்தியதற்கு முக்கிய காரணமே யாவரும் பய பக்தியுடன் நோக்குவார்கள் என்பதேயாகும். ”**

இங்கே கேதார கௌரி விரதம் பற்றிய நிலை கதைவடிவில் புராணமாய் வழங்கி வருகிறது. இங்கே சிறந்ததோர் வாழ்வியல் தத்துவம் வெளிப்பட்டு நிற்பதுதான் மிகவும் முக்கியம் எனலாம்.

மனித வாழ்வில் இல்லற வாழ்க்கை என்பது அன்பின் அடிப்படையில் அமைதல் மிக மிக அவசியமாகும். அன்பு என்பதுதான் இல்லறத்தின் ஆணிவேராகும்.அன்பு மலரும் இல்லறம்தான் நல்லறமாக மலரமுடியும். பெண்கள் என்பவர்கள் சக்தியின் வடிவமாவர். ஆணுக்கு வாழ்க்கையில் அருந்துணையே பெண்தான். இதனால்த்தான் வள்ளுவம் வாழ்க்கைத் துணை என்னும் தேடற்கரிய பெயரினைச் சூட்டியது எனலாம். வாழ்க்கையின் துணையான பெண்தான் இல்லறத்தின் உயிர்நாடியாகிறாள். அந்தப் பெண்மைக்கு முக்கியத்துவம் நல்குவதுதான் கேதார கௌரி விரதம் ஆகும்.

சுமங்கலியாய் வாழ்வதையே இல்லறத்தில் இருக்கும் எல்லாப் பெண்களும் பெருமையாய் பெருவரமாய் எண்ணுகிறார்கள். அந்தப் பெருவரத்தை அவர்களுக்குப் பெற்றுத்தரும் விரதமாக கேதார கௌரி விரதம் அமைவதுதான் வாழ்வியலின் மிகச்சிறந்த நிலை எனலாம்.

ஜோதிடவியல் வழியில் சூரியனும் சந்திரனும் மிகவும் முக்கியமான கிரகங்களாகும். இரண்டுமே மனித வாழ்வியலோடு இணைந்தே நிற்கின்றன.

சூரியனை தந்தைக் கிரகமென்றும் சந்திரனை தாய்க்கிரகமென்றும், சூரியனுக்கு உரிய தேவதையாக பரமேஸ்வரனையும் சந்திரனுக்குரிய தேவதையாக கௌரியையும் காட்டும் நிலை ஜோதிடத்தில் இருக்கிறது.

கேதார கௌரி விரதம் இடம்பெறும் காலத்தில் சூரியன் தனது வலிமையை இழந்து காணப்படுகிறது. அவ்வேளை சந்திரன் இணையும் நிலையில் அதாவது அமாவாசையில் நல்லதொரு சங்கமம் நிகழ்கிறது. தந்தையான சூரியனும் தாயான சந்திரனும் இணையும் காலம் கேதார கௌரி விரதம் பூர்த்தியாகும் நாளாக அமைவதும் ஆணான சிவனும் பெண்ணான பார்வதியும் இணைவதும் மிகவும் பொருத்தமாய் அமைகிறது என்று ஜோதிட நிலை காட்டுகிறது.

எந்த நிலையில் பார்த்தாலும் ஆணும் பெண்ணும் இணையும் அற்புத நிகழ்வு கேதார கௌரி விரதத்தின் வாழ்வியல் முறை என்றே எடுத்துக் கொள்ளலாம்.

இல்லறத்தின் உயிர்நாடியே இந்த இணைப்பு அல்லவா? அந்த இணைப்பை நல்கிடும் கேதார கௌரி விரதம் நல்லதோர் வாழ்வியல் தத்துவமாக மலர்ந்து நிற்கிறது மனங்கொள்ளத்தக்கதாகும்.

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே**

காலைக்கதிர் Kalaikkathir



இந்தவாரம் இவர்

ஆக்கம் - ப்ரியமதா பயஸ்

# ஈழத்து நாதஸ்வர இசை வித்துவான்

# குமரன் பஞ்சமூர்த்தி



இலங்கை நாதஸ்வர இசைக் கலைஞர்களிடையே மிகவும் பிரசித்தி பெற்ற குடும்பத்தின் வாரிசாக வளர்ந்து, இன்று ஊருக்கும் தமிழர்களுக்கும் பெருமை சேர்க்கும் இசை வாரிசாக திகழ்பவர் நாதஸ்வரக் கலைஞர் குமரன் பஞ்சமூர்த்தி.

யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்கு எனும் ஊரில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வரும் குமரன் பஞ்சமூர்த்தி இலங்கையின் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞரான பஞ்சமூர்த்தியின் ஒரே வாரிசு ஆவார். தந்தையின் இடத்தில் வைத்து புகழும் அளவுக்கு பெரும் இசை விசித்திரங்களை படைக்கும் சிறந்த ஆற்றலுள்ள கலைஞராக இயங்குகின்றார்.

இவர் தனது தந்தையிடமிருந்து 6 வயது முதல் நாதஸ்வர கலையினை பயிலத்தொடங்கி தனது 10 ஆவது வயதில் மேடைகளிலே நாதஸ்வர கச்சேரிகளை நடத்துமளவிற்கு முறையாக கலையினை பயின்ற ஒருவராக திகழ்ந்தார்.

தந்தையைப்போன்று இலங்கையில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் தனது கலை திறமையை வெளிப்படுத்தி யாழ்ப்பாண மண்ணுக்கு பெரும் பெருமைசேர்த்த ஒருவராக இருக்கின்றார். இலங்கை, இந்தியா, ஐரோப்பா, கனடா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற தமிழர்கள் செறிந்து வாழும் நாடுகளில் தமிழ் கலாச்சார நிகழ்வுகள்,ஆலய உற்சவங்களில் இவரின் நாதஸ்வர இசை ஒலிக்க வேண்டும் என நம் மண்ணின் மக்கள் விரும்பி இவரை அழைத்து யாழ் மண்ணின் பெரும் இசையை உலகளவுக்கு பரப்பி வருவது என்றும் பாராட்டத்தக்க ஒரு விடயமே.

இலங்கையின் வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பிரபல நாதஸ்வர மேதை வி. கோதண்டபாணிக்கும், இராஜேஸ்வரிக்கும் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் பிறந்தவர் குமரனின் தந்தை வி. கே. பஞ்சமூர்த்தி.



வி. கே. பஞ்சமூர்த்தியின் ஆரம்ப குரு பேரனார் மூளாய் ஆறுமுகம்பிள்ளை, இணுவில் கந்தசாமிப்பிள்ளை, தந்தை அமரர் கோதண்டபாணி. அதன் பின் வி. கே. பஞ்சமூர்த்தி தமிழகம் சென்று ஆண்டார்கோயில் ஏ. வி. செல்வரத்தினம்பிள்ளை, அமரர் குளிக்கரை பிச்சையப்பாபிள்ளை ஆகியோரிடம் குருவாசம் பெற்று நாதஸ்வரக் கலையை முறையாகப் பயின்று மீண்டும் இலங்கை திரும்பினார்.

வி.கே.கானமூர்த்தி வி.கே.பஞ்சமூர்த்தி ஆகிய இரட்டையர்கள் - 1970 களில் இருந்து 2000 வரையான காலப்பகுதியில் இலங்கையின் பல பகுதிகளில் நாதஸ்வர இசை பொழிந்த பிரபல கலைஞர்கள்.

இவரின் தமையனார் கலாபூஷணம் வி.கே. கானமூர்த்தி. இருவரும் 33 ஆண்டுகள் இரட்டையர்களாக நாதஸ்வரம்



வாசித்தவர்கள். இவர்கள் இலங்கையில் பல பாகங்களிலும், தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் உட்பட உலகின் பல பாகங்களுக்கும் சென்று பாராட்டும், புகழும் பெற்றவர்கள் .

மார்ச் 23, 1989 இவர்கள் இருவரும் நாதஸ்வர இசைத்துறையில் பிரவேசித்த வெள்ளிவிழாவை கம்பன் கழகம், யாழ் பல்கலைக்கழகம் கைலாசபதி அரங்கில் விழாவாக நடத்தியது.

இவர்கள் பல்லாண்டுகளாக பல சைவ ஆலயங்கள், திருமணச் சடங்குகள் என இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று நாதஸ்வரம் வாசித்து பெரும் விருதுகள், பாராட்டுகள், கௌரவங்கள் என பெற்றார்கள்.

வி.கே.கானமூர்த்தி செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி , 2008 ஆம் ஆண்டு புதன் கிழமை இரவு 11 மணியளவில் நோய் வாய்ப்பட்டு இருந்து காலமானார்.

அதற்கு பின்னர் வி .கே.பஞ்சமூர்த்தி பெருமளவில் நாதஸ்வர கச்சேரிகளில் பங்குபெறுவதில்லை. அவரது மகனான குமரன் பஞ்சமூர்த்தி அவர்களே தந்தை மற்றும் தன் பெரிய தந்தையரின் கனவுகளை கச்சிதமாக நிறைவேற்றும் கலைஞராக விளங்குகின்றார் .

அண்மையில் இசைஞானி இளையராஜாவை நாதஸ்வர வித்துவான் பஞ்சமூர்த்தி குமரன் சந்தித்து இந்தியாவிலும் தன் இசைப் பலத்தை காட்டியுள்ளமை இலங்கை இசைத்துறையினர் பெருமைப்படும் விடயமாக அமைந்துள்ளது. டி.



இமான் இசையமைத்து வெளியாகவுள்ள அண்ணாத்தா திரைப்படத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றிற்கு நாதஸ்வர இசையினை வழங்கியுள்ளார்.

இந்திய சினிமாவில் இலங்கையின் இசைக்கலைஞர் அதுவும் நாதஸ்வர இசைக்கலைஞருக்கு சந்தர்ப்பம் அளித்தமை இதுவே முதன்முறையாகும்.

இலங்கையில் நாதஸ்வர இசையில் யொலிக்கும் குமரன் மிக நேர்த்தியான சங்கீத ஞானம் கொண்ட கலைஞன். தென்னிந்தியசினிமாப்பாடல்கள் ஆயினும், சங்கீத ஸ்வரங்கள் ஆயினும், கர்நாடக சங்கீதப்பாடல்கள் ஆயினும், பக்திகீதங்கள் ஆயினும் மிக லாவகமாக நாதஸ்வரத்தில் மீட்டும் இளங்கலைஞராக இருக்கிறார், பாடல்களை நேர்த்தியாக வாசிக்கும் போக்கிலேயே இசை ரசிகர்களை கட்டிப்போடும் குமரன் சிறந்த நேர்த்தியாக புடம் போடப்பட்டவர் என்பது அவரது வாசிப்பில் தெரியும் படி அழகாக இசை பரப்புவார். இன்றுபோல் என்றும் ஈழத்து இசைப் பரப்பில் அவர் மங்காது ஒளிவீசட்டும் .

# வடமாகாண ஆசிரியர்களின் 6 வருட சேவைக்காலம் அரசால் கொள்ளை!

## டக்ளஸ் தேவானந்தாவும் உடந்தை என பாதிக்கப்பட்டவர்கள் குற்றச்சாட்டு

வடமாகாணக் கல்வி அமைச்சால் ஆசிரியர் நியமனம் வழுங்கப்பட்டு தாம் பாடசாலைகளில் கற்பித்தல் பணியில் ஈடுபட்ட தமது 6 வருட சேவைக் காலத்தை தமது சேவைக் காலத்துடன் இன்று வரை சேர்த்துக் கொள்ளாது அரசால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு வடமாகாணத்திலுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உடந்தையாகவிருந்துள்ளார் எனவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நீண்டகாலமாக கற்பித்தல் பணியில் ஈடுபட்டு வந்த வடமாகாணத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு வடமாகாணக் கல்வி அமைச்சால் ஆசிரியர் நிரந்தர நியமனம் வழுங்குவதாகக் கூறி ஆசிரிய உதவியாளர் எனும் நியமனம் வழுங்கப்பட்டது. இந் நியமனக் கடிதங்களை அப்போதும் தற்போதும் அமைச்சராகவுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவே முன்நின்று வழுங்கி வைத்தார்.

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு முற்றிலும் முரணான வகையில் ஆசிரிய உதவியாளர் எனும் விசித்திரமான நியமனம் வழுங்கியமையுடன் அவர்களுக்கு மிகவும் குறைந்த வேதனமாக அப்போது 6 ஆயிரம் ரூபாவே வழுங்கப்பட்டு வந்தது. இப்படியாக இவர்கள் பாடசாலைகளில் சேவையாற்றிய 6 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் இவர்களது சேவைக் காலத்துடன் சேர்த்துக்கொள்ளப்படாதுள்ளதுடன் அக்காலப் பகுதியில் அவர்கள் சேவையாற்றியதற்கான சம்பள நிலுவைப் பணமும் இன்னமும் வழுங்கப்படவில்லை எனவும் கூறிக் குற்றம் சாட்டும் பாதிக்கப்பட்ட இவர்கள் மேலும் கூறுகையில், தாம் சேவையாற்றிய 6 வருட சேவைக் காலத்தை தமது சேவைக் காலத்துடன் சேர்த்துக்கொள்ளாதமையால் தமது பதவி உயர்வு, சம்பள ஏற்றம் போன்றவற்றிலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் எனவும் கூறிக் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றார்கள்.

இந்த விடயம் குறித்து உரிய பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரை தாம் பல தடவைகள், தமக்கு நியமனம் வழுங்கப்பட்டதன் பின்னர் தாம் சேவையாற்றிய தமது 6 வருட சேவைக் காலத்தை தமது சேவைக் காலத்துடன் சேர்த்துக் கொள்ளுமாறு பல கடிதங்களை அனுப்பியும் நேரடியாகச் சந்தித்தும் கோரப்பட்ட போதிலும் இது வரை தாம் சேவையாற்றிய 6 வருட சேவைக்காலம் தமது சேவைக் காலத்துடன் சேர்த்துக்கொள்ளப்படவில்லை எனக் கூறிக் கவலை தெரிவிக்கின்றார்கள்.

மேலும் தாம் சேவையாற்றிய 6 வருட சேவைக் காலத்தை அரசு சேவைக்காலத்துடன் சேர்த்துக் கொண்டால் அக்காலப் பகுதியிலிருந்து சம்பள நிலுவைகளை வழுங்க வேண்டிய நிலை வரும். அப்படி சம்பள நிலுவைப் பணத்தை வழுங்குவதற்கு அரசுக்குப் பெருந்தொகைப் பணம் தேவைப்படும். அதேவேளை இச்சம்பள நிலுவை வேலைகளைச் செய்வதும் பெரும் வேலைச் சுமை அதனாலேயே அவர்களது 6 வருட சேவைக் காலம் சேர்த்துக்கொள்ளப்படவில்லை எனும் நிலையில் அரசு உள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஆசிரியர் தொழிற்சங்கங்களால் அரசிடம் கோரப்பட்டு வரும் ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காணுமாறு முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளில் ஆசிரிய உதவியாளர்கள் என நியமனம் வழுங்கிய ஆசிரியர்களது சேவைக் காலத்தைச் சேர்த்துக்கொள்ளல், அவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டிய பதவி உயர்வுகளை உரிய காலத்தில் வழுங்கல், சம்பள நிலுவைகளை காலதாமதமின்றி வழுங்குதல் போன்ற கோரிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பகுப்பாய்வுக் கருத்தரங்கு

*யாழ். முகாமையாளர் சம்மேளனம் மற்றும் e - kalvi இணைந்து நடாத்தும் கா.பொ.த. சாதாரண தர 2021பரீட்சைபெறுபேறுதொடர்பான பகுப்பாய்வுநாளைபி.ப. 4 மணிக்கு Webiner மூலம் நடைபெறவுள்ளது.*

Meeting Id - 81881430113
Passcode - ekalvi

*இவ்பகுப்பாய்வில்வளவாளர்களாக வாழ்நாள் பேராசிரியர் ம.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்), செல்வராஜா முரளிதரன் (e - kalvi நிறுவனத்தின் தலைவர்), கலாநிதி குமாரவேலு கணேசன் (செயலாளர் e - kalvi அறக்கொடை நிறுவனம்) ஆகியோர் செயற்படவுள்ளனர்.*

## இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட கிருமிநாசினி மன்னாரில் 155 போத்தல்கள் மீட்கப்பட்டன



(ந.லோகதயாளன்)

நாட்டில் நிலவும் கிருமிநாசினித் தட்டுப்பாட்டையடுத்து இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட ஒரு தொகுதி கிருமிநாசினிப் போத்தல்கள் மன்னாரில் பிடிபட்டன.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட சமயம் கடற்படையினரைக் கண்டதும் கடலில் வீசிவிட்டு இந்தியப் படகு தப்பிச் சென்ற நிலையில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது 155 போத்தல் கிருமிநாசினிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வகை கிருமிநாசினி தென்னஞ் செய்கைக்கு உபயோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 72 பேர் கைது!

நாட்டில் நடைமுறையிலுள்ள தனிமைப் படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியிலேயே குறித்த 72 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2020 ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 80 ஆயிரத்து 862 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அட்டை பிடித்த மூன்று படகுகள் திணைக்கள அதிகாரிகளால் கைது

(ந.லோகதயாளன்)

மன்னாரில் ட்ரோலர் படகு மூலம் இழுவை மடி பயன்படுத்தி அட்டை பிடித்த மூன்று படகுகள் திணைக்கள அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டன.

ட்ரோலர் படகில் சென்று இழுவை மடி பயன்படுத்தி கடல் அட்டை பிடிப்பதான முறைப்பாட்டையடுத்து நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறை அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது இந்த தொழிலில் ஈடுபட்ட மூன்று ட்ரோலர்கள் அகப்பட்டன.



இதன்போது இழுவை மடி மூலம் பிடிக்கப்பட்ட கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டவர்களுக்கு ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டது. இதன்போது பறிமுதல் செய்யப்பட்ட உடன் அட்டைகள் 18 ஆயிரத்து 650 ரூபாவிற்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதோடு வழக்குப் பதிவு செய்யப்பட்டு உரிமையாளர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விஜயதசமி, மானம்பூ உற்சவம்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விஜயதசமி, மானம்பூ உற்சவம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றது.

குறித்த உற்சவம் காலை 6.45 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் திருவிழா ஆரம்பமானது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நல்லூரின் பண்டைய காலத்தில் உபயோகிக்கப்பட்ட பழைமையான சிறிய குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி அமைதியான முறையில் மானம்பூ உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2021 இல் வெளியிடப்பெற்றது.

# விபத்தில் காயமடைந்த இளைஞர் உயிரிழப்பு!

யாழ்., சாவகச்சேரியில் இடம் பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்த குறித்த இளைஞர் நேற்று அதிகாலை மரணமடைந்துள்ளார்.



மடத்தடிப் பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

படுகாயம் அடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார். சாவகச்சேரியைச் சேர்ந்த 24 வய தான வ.நிரோஷ் என்பவரே மரணமடைந்துள்ளார்.

இவர் அண்மையிலேயே வெளிநாடு ஒன்றிலிருந்து நாடு திரும்பியிருந்தவர் என்று விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

---

## புதிய சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுக்குள் நடத்தப்படும் விருந்துபசார நிகழ்வுகள் உள்ளிட்ட அனைத்து வகையான உள்ளக மற்றும் வெளியக விருந்துபசாரங்களுக்குத் தொடர்ந்தும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

திருமண மண்டபங்களில் 50 நபர்களுக்கு மேற்படாத வகையில் அல்லது மண்டப கொள்ளளவில் 25 சதவீதமானோரை உள்ளடக்கியதாகத் திருமண வைபவங்களை நடத்த சுகாதார வழிகாட்டியில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மரண சடங்குகளில் கலந்துகொள்ள ஒரே தடவையில் 20 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சமய ஸ்தலங்கள், கூட்டு வழிபாடு மற்றும் கூட்டங்களுக்கு அனுமதி இல்லை.

பாடசாலைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கு அமைய 200 இற்கும் குறைவான மா ணவர்களின் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளை முதல் கட்டமாகத் திறக்க முடியும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களை சுகாதார வழிகாட்டலுக்கு அமைய ஆரம்பிக்க முடியும்.

முன்பள்ளிகளை 50 சதவீத மாணவர் கொள்ளளவைக் கொண்டு முன்னெடுக்க முடியும்.

பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதார மத்திய நிலையங்கள் மொத்த விற்பனைக்காக அனுமதிக்கப்படுவதுடன், பிரதேச குழுக்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் அவை இயங்க வேண்டும்.

திறந்த சந்தைகள் மற்றும் வாராந்த சந்தைகள் என்பனவும் பிரதேச குழுக்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் இயங்க வேண்டும்.

உணவகங்களில் உணவு விநியோகத்திற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நடமாடும் வர்த்தகங்கள் பிரதேச குழுக்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் இயங்க வேண்டும்.

வர்த்தக நிலையங்கள், சில்லறை வர்த்தக நிலையங்கள், மருந்தகங்கள், சிறப்பு அங்காடிகள் மற்றும் வீட்டுப் பொருள் விற்பனை நிலையங்கள் என்பனவற்றில் ஒரு சந்தர்ப்பத்தில் மொத்த கொள்ளளவில் 20 சதவீதமானோருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

குறித்த இடங்களில் அனுமதிக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கை வெளியே காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

வங்கிகள், நிதி நிறுவனங்கள், அடகு பிடிப்பு நிலையங்களில் ஒரு சந்தர்ப்பத்தில் 5 பேரை மாத்திரம் அனுமதிக்க முடியும் என்பதுடன் ஏனையோர் குறித்த இடங்களுக்கு வெளியே சமூக இடைவெளியை பேணியவாறு வரிசையில் நிற்க முடியும்.

கட்டுமாண தளங்களின் பணிகளை சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய முன்னெடுக்க முடியும்.

விவசாய நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிகையலங்கார நிலையம், அழகுக்கலை நிலையங்களில் முன்பதிவு செய்துள்ள வாடிக்கையாளர்களுக்குச் சேவை வழங்க முடியும்.

திரையரங்குகளில் ஒரு சந்தர்ப்பத்தில் மொத்த கொள்ளளவில் 25 சதவீதமானோருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக வகுப்புகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலை நடவடிக்கைகளைச் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய முன்னெடுத்து செல்ல முடியும் எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## ஐ.பி.எல். கிண்ணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, முதல் களத்தடுப்பை தேர்வுசெய்ய, சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்நிலையில், சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

அதன்படி 27 ஓட்டங்களால் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சம்பியனானது.

இதுவரையில், ஐ.பி.எல். தொடர்களில் 9 முறை இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ள சென்னை அணி இம்முறையுடன் சேர்த்து மொத்தமாக 4 தடவைகள் ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றுள்ளது.

இதேவேளை, மூன்று முறை ஐ.பி.எல். இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற கொல்கத்தா அணி இரண்டு தடவைகள் சம்பியனாகியுள்ளது.

## மேலும் 20 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரையில் கொரோனாத் தொற்றால் சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 449 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ள 20 பேரில் 11 ஆண்களும், 9 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் 30 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருவர் சாவடைந்துள்ளார்.

30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 ஆண்களும் இரண்டு பெண்களுமாக 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 14 பேர் சாவடைந்துள்ளனர். அவர்க ளில் 8 ஆண்களும், 6 பெண்களும் அடங்குகின்றனர்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 30 ஆயிரத்து 421 ஆக எகிறியுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 354 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 91 ஆயிரத்து 958 ஆக அதிகரித்துள்ளது.

## வடக்கு நிர்வாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்ற அன்றைய தினமே தனது கடமைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் இருவரும் மாகாண நிர்வாகக் கட்டமைப்பில் புதியவர்கள். அந்த சவால் எப்பிடி இருக்கும் என்று ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது,

அப்படி எதுவும் இல்லை. இருவருக்கும் அனுபவம் உண்டு. பெரிய குழுக்களுடன் பணியாற்றுபவர்கள் என்று ஆளுநர் ஜீவன் தியாகராஜா பதிலளித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஒக்டோபர் 21 ஆம் திகதி தரம் 1 – 5 வரையிலான 639 பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்றும் வாவர் மேலும் கூறியுள்ளார்.

## கரன்னாகொடவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் எடுத்துள்ள தீர்மானத்தைச் சவாலுக்கு உட்படுத்தி, காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் நால்வரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த எழுத்தாணை மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, வசந்த கரன்னாகொட மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

2008ஆம் ஆண்டு கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொடவும் தொடர்புபட்டுள்ளதாக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தனக்கு எதிராக மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தை வலுவிழக்கச் செய்யக் கோரி, வசந்த கரன்னாகொட ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு கடந்த 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி அவன்தி பெரேரா குற்றப்பத்திரத்தை நீக்கிக்கொள்வதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில், சட்டமா அதிபரின் குறித்த தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி, காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை அன்றைய தினத்தில் ஆஜராகுமாறு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மாகாணங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் 20ஆம் திகதிகள் விடுமுறை தினங்க ளாக அமையப்பெற்று

நீண்ட விடுமுறையுடன் கூடிய வார இறுதி அமையப்பெறவுள்ளமையால், அனைத்து மாகாண எல்லைகளிலும் போக்குவரத்து நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புத் துறையினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

நேற்று முற்பகல், வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெற்ற கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போதே, ஜனாதிபதி மேற்கண்ட பணிப்புரையை விடுத்தார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களான 18 – 19 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகள், நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அத்துடன், ஏனைய மாவட்டங்களிலுள்ள மேற்படி வயதுப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பிள்ளைகளுக்கும், இம்மாதம் 21ஆம் திகதி முதல், பாடசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாகத் தடுப்பூசி ஏற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைவாக, பாடசாலை மாணவர்களுக்கு ஒரு டோஸ் தடுப்பூசியும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகளும் செலுத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட பின்னர், சுகாதாரப் பரிந்துரைகளுக்கமைய, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான மூன்றாவது டோஸ் தடுப்பூச்சியைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமையன்று, மேலும் 6 இலட்சம் பைசர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும், கோரப்பட்டிருந்த தடுப்பூசிகள் தொடர்ந்த கிடைத்துக் கொண்டு இருக்கின்றன என்றும் கொரோனாத் தடுப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், தொற்றுக்கு இலக்காகும் நோயாளிகள் தற்போது கண்டறியப்படும் பிரதேசங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, அவ்விடங்களைத் தனிமைப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கொரோனா ஒழிப்புக்காக சுகாதாரத் தரப்பினர் பின்பற்றிய வீட்டுத் தனிமைப் படுத்தல் வேலைத்திட்டமானது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட பாராட்டைப் பெற்றுள்ளது என விசேட வைத்திய நிபுணர் அநுருத்த பாதெனிய, கொவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போது அறிவித்தார்.

## சகல மக்களையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இப்போது அனைத்து மக்களையும் ஒடுக்குகின்றது. இன்று கிராமம் கிராமமாக, வீடு வீடாக பொருளாதார நெருக்கடியின் வேதனையில் மக்கள் உள்ளனர். அந்த 7 மூளைகளைக்கொண்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இப்போது எங்கே?

– இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

கெஸ்பேவ நகரத்தில் நேற்று 'விருப்பப்படி ஆட்சியாளர்கள் – பட்டினியில் மக்கள்' என்னும் தொனிப்பொருளில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசு எந்தவிதக் கவனத்தையும் செலுத்தவில்லை. நாட்டில் நண்பர்கள் கும்பல் மற்றும் பாரிய அளவிலான மாபியாக்கள் செயற்படுகின்றன.

அரசு நாளுக்கு நாள் மக்களை ஒடுக்கிக் கொண்டே செல்லுகின்றது. சிவில் உரிமைகள், பொருளாதார உரிமைகள், அரசியல் உரிமைகள் மற்றும் கலாசார உரிமைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

மாறாக, மக்களுக்கு அசௌகரியத்தையும் வறுமையால் வாட்டுவதையுமே அரசு இன்று செய்கின்றது – என்றார்.